பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

The Valampuri

ஆசியா கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி 26 | திங்கட்கிழமை | (11.08.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி .235

# உள்துறை அமைச்சருக்கு எதிராக

# யாழ்.செயலகத்தில் நேற்று மறியல்!



அமைச்சரின் வரவை எதிர்த்து யாழ்.செயலகம் முன்பாக மறியல் போரில் ஈடுபட்டிருப்போரில் ஒரு பகுதியினர்.



போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை சமாதானப்படுத்தும் முயற்சியில் ரவிராஜ் எம்.பி

## கலந்துரையாடல் ரத்து செய்யப்பட்டது

(அலுவலக நிருபர்)

**நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த அமைச்சர் ஜோன் அமரதுங்கவும், மற்றும் உயர் அதிகாரிகள் குழுவும் யாழ்.செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விஷேட கலந்துரையாடலில் பங்குபற்றுவதாக இருந்த போதிலும், செயலக நுழைவாயிலில் அமைச்சரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமையால் கலந்துரையாடல் ரத்து செய்யப்பட்டது.**

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவும் மற்றும் உயர் அதிகாரிகள் குழுவும், குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பை முடித்துக் கொண்டு யாழ்.செயலகத்தில் நடைபெறவிருந்த யாழ்.மாவட்டத்தின் சமகால நிகழ்வுகள் தொடர்பான கலந்துரையாடலில் பங்கு பற்ற இருந்தனர்.

எனினும், யாழ்ப்பாணத்தில் காணாமற் போனோரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தினரும், உயர் பாதுகாப்பு வலய பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்த மக்களும் யாழ்.செயலக முன்றலில் அமைச்சரின் வருகையை எதிர்த்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதனால் செயலக கலந்துரையாடல்

(10ம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தைக் குழுவில் இருந்து என்னை விலக்கி விடுங்கள்!

## பிரதமரிடம் கேட்கிறார் அமைச்சர் மிலிந்த

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தையில் அரச குழுவின் சார்பில கலந்து கொண்ட பொருளாதார மீள் கட்டமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட அப் பேச்சுவார்த்தைக் குழுவில் இருந்து தன்னை நீக்கிவிடுமாறு பிரதமர் ரணில விக்கிரமசிங்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஜனாதிபதிக்கும் அரசு அனுப்பி வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்ட வரைபில் முரண்பாடான அம்சங்கள் காணப்படுவதான சர்ச்சையை அடுத்தே அமைச்சர் மிலிந்த மொறகொட அரசின் சமாதானப் பேச்சுவார்த்தைக் குழுவில இருந்து விலகிக் கொள்ளப் போவதாக பிரதமருக்குத் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

அரசு அனுப்பிய இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்ட வரைபுக்கு விடுதலைப் புலிகள் பதில் அனுப்பிய பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்படலாம் என்று கூறப்பட்டு வரும் அதேவேளை அமைச்சர் மிலிந்த மொறகொடவின் இக் கோரிக்கை அரசுக்குள் பலத்த நெருக்கடியை தோற்றுவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அமைச்சர் மிலிந்த மொறகொடவின் கோரிக்கைக்கு பிரதமர் இதுவரை எந்தவிதமான கருத்தையோ, பதிலையோ தெரிவிக்கவில்லை. (வ)

# சிங்கள தேசம் மீண்டும் ஏமாற்றினால்

# அதன் விளைவை அனுபவிக்க நேரிடும்

## தேசிய எழுச்சிப் பேரொளர் மாநாட்டில் தமிழ்ச்செல்வன்

(பளையில் இருந்து ஜெறாட்)

சமாதானப் பேச்சு என்ற போர்வையில் சிங்கள தேசம் மீண்டும் எம்மை ஏமாற்ற முற்பட்டால் அதன் விளைவை அவர்கள் அனுபவித்தே ஆகவேண்டும்.

இவ்வாறு தமிழ்ழ அரசியல் துறைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். நேற்றைய தினம் பளை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரொளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு எச்சரித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேசத்தின் உதவியுடன் இலங்கை அரசாங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் யுத்தத்தை நிறுத்துவதற்கான உடன்படிக்கை மட்டுமல்ல. தமிழ் மக்களின வாழ்வில் இயல்பு நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தைக் கருத்திற் கொண்டே புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கு சிங்கள தேசம் தயாராகவில்லை. இப்பொழுதும் குளறுபடி நிலையிலேயே உள்ளது.

இந்நிலையிலும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னகர்த்திச் செல்லவேண்டும் என்ற நோக்கில் நாம் செயற்பட்டு வருகின்ற போதிலும், பேரினவாதச் சக்திகள் சமாதான முயற்சியைச் சீர்குலைப்பதற்கு கங்கணங்கட்டியிருக்கின்றன. சிங்கள தேசம் ஒன்றுதிரண்டு தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வைக் கொடுக்க முன்வரவேண்டும். நாங்கள் மிக உறுதியோடு இருக்கிறோம். கடந்த காலங்களைப்போல் விடுதலைப் புலிகள் ஏமாற்றப்படக்கூடிய சக்தியல்ல. நடமாடும் போராட்ட சக்தியாக தமிழர்களுடைய படையணி இருக்கிறது - தமிழர்களுடைய தலைமை அந்த உறுதியோடும்,


(10ம் பக்கம் பார்க்க)



பேரொளர் மாநாட்டில் பொது மக்களுடன் தமிழ்ச்செல்வன்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


## உள்துறை அமைச்சரின் யாழ். விஜயத்தின்போது...



யாழ். புனித யாகப்பர் ஆலய வழிபாட்டில் அமைச்சர்.



நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினர்.



யாழ்ப்பாணத்தில் புதிய சிறைச்சாலையை அமைப்பது தொடர் பாக சிறைச்சாலை ஆணையாளர் விளக்குகிறார்.



யாழ். பொலிஸ் நிலைய அணிவகுப்பு மரியாதையை அமைச்சர் ஏற்றுக்கொள்கிறார்.



பொலிஸ்நிலைய நடைமுறை பற்றி அதிகாரிகளுடன் கலந்துரை யாடும் போது...

## சாட்டி மாதா ஆலயத்திற்கு மின்சாரம்

(வேலணை)

சாட்டி மாதா தேவாலயத்திற்குச் சுமார் 15 வருடங்களுக்குப் பின்னர் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

சாட்டிப் பகுதிக்கு மீண்டும் மின் சாரம் வழங்கப்பட்டதனாலேயே தற் போது ஆலயத்திற்கு மின்னொளி கிடைத்துள்ளது. (பி-47)

## ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ்

(வேலணை)

ஊர்காவற்றுறை வைத்தியசா லைக்கு புதிய அம்புலன்ஸ் வண்டி யொன்று வழங்கப்படவுள்ளது.

நீண்ட காலமாக ஊர்காவற்று றையிலிருந்து அவசர சிகிச்சைக் காக நோயாளர்களை யாழ். போத னா வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு அம்புலன்ஸ் வண்டி இல்லாத காரணத்தால் பல அசௌ கரியங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இவற்றை நீக்குமுகமாக யு.என். எச்.சி.ஆரின் நிதியுதவியில் இப் புதிய அம்புலன்ஸ் வண்டி வழங்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பி-47)

## பல்கலை ஊழியர் சங்க நிர்வாகிகள்

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங் கத்தின் புதிய நிர்வாகிகளாக பின்வரு வோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக சி.தங்கராஜா, உப தலைவராக மு.யோகேந்திரன், இணைச் செயலாளர்களாக வே. சிவசுப்பிரமணியம், மா.குணசேகரன், பொருளாளராக இ.செல்வராசா, உப பொருளாளராக நா.இராசரத் தினம், பத்திராதிபராக சி.கலாராஜ், பொது நலஉத்தியோகத்தராக அ.சந்தியா, விளையாட்டுப் பொறுப் பாளராக க.நாகஜெயக்குமாரன் இவர் களுடன் ஒவ்வொரு பீடத்திற்கான பிரதி நிதிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்.(பி)

## சுவாமி தந்திரதேவா சுவிஸ் பயணமாகிறார்

(கொழும்பு)

சுவிஸ் நாட்டில் உள்ள சூரிச் நகர் ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய உற் சவத்தின்போது ஆன்மீகச் சொற் பொழிவாற்றுவதற்கென சுவாமி தந் திரதேவா சுவிஸ் பயணமாகவுள்ளார்.

இவ்வாலயத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையான 10 தினங்களிலும் சுவா மியின சொற்பொழிவு இடம்பெறவுள் ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (8)

## இறால் பண்ணை தீயிடப்பட்டது

(புத்தளம்)

புத்தளம் பாலாவிப் பகுதியில் அமைந்துள்ள இறால் பண்ணை ஒன்று தீயிட்டுக் கொளுத்தப்பட்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நடைபெற்ற இச்சம்பவம் குறித்துப் பொலிஸார் தீவிர விசா ரணை மேற்கொண்டு வருவதுடன், இச் சம்பவத்திற்கும் சில அரசியல் வாதிகளுக்கும் இடையில் தொடர்பு உண்டா என்பது குறித்தும் ஆராய் ந்து வருவதாகக் கூறப்படுகின்றது. (பி-10)

## மடுமாதா பெருவிழா

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 15ஆம் திகதி இடம் பெறவுள்ள மடுமாதா பெருவிழா விற்கு சுமார் 4 இலட்சம் பக்தர் கள் கூடுவார்கள் என எதிர்பார்க் கப்படுகிறது.

இதனடிப்படையில் அவர்களுக் குத் தேவையான பிரயாண ஏற் பாடுகள் மற்றும் பிற ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-18)

## முழுநாள் கருத்தரங்கு

(வேலணை)

பெணகள் அபிவிருத்தி நிலையத் தின் அனுசரணையுடன் வேலணைத் துறையூர் ஐயனார் வித்தியாசாலை மண்டபத்தில் பெண்கள் அபிவிருத்தி தொடர்பான முழுநாள் கருத்தரங்கு ஒன்று மேற்படி நிலையத்தின் தலைவி திருமதி சறோஜா சிவச்சந்திரன் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

இக்கருத்தரங்கில் பெண்கள் அபி விருத்தி, தொழில்சார் முயற்சிகள் மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட பல விடயங்கள் ஆராயப்பட்டன. (பி-47)

உள்துறை அமைச்சரின் யாழ். விஜயத்தின்போது...




குருநகர் தொடர் மாடியை அண்மித்த பாதுகாப்பு வலயத்தைப் பார்வையிட்ட போது.




இந்து கலாசார அமைச்சருடன் கடற்கரையோரப் பாதுகாப்பு வலயத்தைப் பார்வையிடும்போது...



கல்மேடாகக் காட்சிதரும் குருநகர்ப் பகுதி.



குப்பை மேட்டிலும் குடிசை...



குருநகரில் சீநோர் நிறுவனம்...

# சிங்கள மக்கள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வையே விரும்புகிறார்கள்

## பேராசிரியர் ஜெயதேவ உயங்கொட கருத்து

(கொழும்பு)

சிங்கள மக்கள் போரை ஒரு போதும் விரும்பவில்லை, அவர்களும் சமாதானத்தையே விரும்புகின்றார்கள். இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வையே எதிர்பார்க்கின்றார்கள்.

அதே நேரத்தில் விடுதலைப் புலிகளைப் பற்றியும் தமிழரின் அரசியல் நோக்கம் பற்றியும் அவர்களிடம் ஒரு பரவலான அச்சம் நிலவிவருகிறது. அத்துடன் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே ஆக்கபூர்வமான அரசியற்பரிமாற்றம் இருக்கவில்லை. சிங்கள தேசியவாதியூடாகவே சிங்கள மக்கள் தமிழ் அரசியல் பற்றி அறிந்து கொள்கிறார்கள்.

இவ்வாறு ஜே.வி.பி.யின் முன்னாள் முக்கியஸ்தரும் கொழும்பு பல்கலைக்கழக அரசியல் துறை பேராசிரியருமான கலாநிதி ஜெயதேவ உயங்கொட தற்போதைய சமாதான நடவடிக்கைகள் குறித்து ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலும் வேறுபல நாடுகளிலும் ஏற்படுத்தப்பட்ட சமாதான ஒப்பந்தங்கள் தோல்வியுற்றமைக்கு பிரதான காரணம், அவை சரியான அரசியல் சமூகசூழலில் செய்யப் படாதுபோனமையேயாகும்.

ஐக்கிய தேசிய முன்னணியினர் ஆட்சிப்பீடமேறியதும் தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்தனர். அதற்கிடையில் இருதரப்பினரும் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்டனர். அதன்படி முதலாம் கட்டப் பேச்சுவார்த்தை கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் ஒஸ்லோவில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து 5சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் நடந்தன. இந்நிலையில், அமெரிக்காவும், ஜப்பானும் உள்நுழைந்தது, இதனால் கேந்திர சமநிலையில் அமைதிப் பேச்சை நடத்திவந்த அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மேற்படி கேந்திர சமநிலை மாறும் சூழல் தோன்றியது.

இதனால் விடுதலைப் புலிகள் பேச்சில் இருந்து தற்காலிகமாக விலகிக் கொண்டார்கள்.எனவே இந்த விடயத்தில் அவர்கள் செய்தமை தவறில்லை.

அத்துடன் இலங்கை அரசிற்கும், புலிகளுக்கும் இடையே எமது சமாதான முயற்சியின் சர்வதேசக் காப்பாளர் முதலாவது கடடத்தை சரியாக மதிப்பீடு செய்து 2ஆம் கட்டத்திற்கு பயனுள்ளதாக தயார்படுத்துவதற்குஓர் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளார்.

அத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை பிரதமரும் ஜனாதிபதியும் தனித்து நின்று நடத்தமுடியாது. எனவே சர்வதேச நாட்டின் உதவியைப் பெற்று சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவேண்டும். அத்துடன் பேச்சு வார்த்தையில் பங்குபற்றும் சர்வதேச நாடுகள் அனுசரணையாளராக மட்டும் இருந்தால் போதும். ஏனென்றால் சர்வதேசநாடுகளின் தலையீடுகளைப் புலிகள் எதிர்மறையாக கொள்ளவாய்ப்புண்டு.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாகசபை அமைப்பதற்கு அரசியல் யாப்பில் இடம் இல்லை எனக்கூறப்பட்டு வருகின்றது.

என்னைப் பொறுத்தவரையில் அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் அதாவது அரசியல் யாப்பின் வரையறைக்குள் ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பை ஏற்படுத்தலாம் என்றே கருதுகிறேன்.

அதற்கிடையில் இடைக்கால நிர்வாகசபையை அமைப்பதற்கு முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் பரஸ்பர அரசியல் நம்பிக்கையும் புரிந்துணர்வும் இப்போதுள்ளதை விட அதிகரிக்க வேண்டும்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் (மாகாணசபைகள் சட்டம்) அனுபவங்களைக்கொண்டு இதில் வரக்கூடிய பிரச்சினைகளை அணுகலாம்.

அத்துடன் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு சில சட்டங்கள் தடையாக இருந்தால், சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய நடைமுறைகளை நாட்டில் ஏற்படுத்தலாம். இவை உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விடயமாகும் என்றார்.

(10)

# நியாயவிலையில் நெல்கொள்வனவுக்கு திறைசேரி நிதி ஒதுக்கவுள்ளது

(கொழும்பு)

கூட்டுறவுச் சங்கங்களும் மகாவலி அதிகார சபையும் நெல் உற்பத்தியாளர்களிடமிருந்து 1கிலோ நெல்லை 13 ரூபாவிற்கு கொளவனவுசெய்ய முன்வந்துள்ளன. இதற்கு தேவையான நிதியைத் திறைசேரி வழங்கவுள்ளது.

அத்துடன், இச் சிறுபோக நெற செய்கையூடாக பெருமளவு நெல்லை கொள்வனவு செய்வதற்கு முன்னர் ஏற்கனவே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல்லைக் குற்றி கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பெரும்போக நெல் உற்பத்தியைக் கொள்வனவு செய்யவென கூட்டுறவுச்சங்கங்களுக்குத் திறைசேரி வழங்கிய 75கோடி ரூபா அறவிடுவதற்கான கால அவகாசத்தை நீடிக்கவும் திறைசேரி இணங்கியுள்ளது.

(பி-10)

# பிரதமர் தலைமையில் சீனா சென்றுள்ள குழு

## அமசோனிக் கம்பனியை பார்வையிட்டது

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான வர்த்தக முதலீட்டுத் தூதுக்குழு நேற்று முன்தினம் சீனா சென்றடைந்துள்ளது. வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் டிறோன் பெர்ணாண்டோ, பெருந்தோட்டக் கைத்தொழி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல சுகாதார பிரதி அமைச்சர் சுஜித் பிறேமதாச மற்றும் இலங்கை முதலீட்டுச்சபையின் தலைவரும் பணிப்பாளர் நாயகமுமான அர்ச்சுன மகேந்திர உட்பட 80 பிரபல வர்த்தகர்களும் இத் தூதுக் குழுவில் அடங்குகின்றனர்.

நேற்று முன்தினம் சீனாவில் உள்ள சியாமன் நகரினையடைந்த பிரதமரும் அவருடன் சென்ற தூதுக் குழுவினரும் அங்குள்ள அமசோனிக் மின்சாரத் தொழில்நுட்பக் கம்பனியைப் பார்வையிட்டனர்.

தொடர்ந்தும் நேற்றைய தினம் சீனாவின் தலைநகரான பெய்ஜிங்கிற்கு சென்றனர்.

பெய்ஜிங்கில் இன்று நடைபெறவுள்ள முதலீட்டுக் கருத்தரங்கு ஒன்றில் இவர்கள் கலந்து கொள்வதுடன்,

இலங்கைக்கும்-சீனாவிற்கும் இடையில் இரட்டை வரி விதிப்பு தடை உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்படவுள்ளது.(பி-10)

# முகம் எரிந்த நிலையில் வவுனியாவில் சடலம்

(வவுனியா)

முகம் எரிந்த நிலையில் 35 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலமொன்று, நேற்று முன்தினம் காலை வவுனியா தட்சனாங்குள சுடலைக்கு அருகில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு நேரில் சென்ற வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளம்செழியன், சடலத்தை சட்ட வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

முகம் எரிந்த நிலையில் சடலம் காணப்படுவதால்,அதனை இனங்காண முடியாதிருப்பதாகவும், இது கொலைச் சம்பவமாக இருக்கலாமெனவும் சந்தேகிக்கப்படுகிறது,

சடலத்துக்கு அருகில் லைற்றர் ஒன்றும். பாவிக்கப்பட்ட 9 மில்லிமீற்றர் வெற்றுத்தோட்டா ஒன்றும் காணப்பட்டன.

(இ)

# கிளி.மலையாளபுரத்தில் மீளக்குடியேறியோருக்கான உதவித்திட்டங்கள் நடைமுறை

(கிளிநொச்சி)

கடந்தகால யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியேறிவரும் கிளிநொச்சி மலையாளபுரம் மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும் போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடனுமே இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக 15 குடும்பங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு ஆடுகளும்,20 குடும்பங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்குமாடுகளும் வழங்கப் படுவதுடன்,20 குடும்பங்களுக்கு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய நிதியுதவிகளும்மற்றும்65 குடும்பங்களுக்குவிவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான பொருட்களும் வழக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்கள் யாவும் கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வுக் கழக மூலம் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(பி-8)

# திருமுறைப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் ஆடிமாதப் பௌர்ணமி தினத்தையொட்டி இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ‘‘திருமுறைப் பெருவிழாவை'' பொன்னாலை பிள்ளையார் தேவஸ்தானத்தில் நடாத்தவுள்ளது.

மன்றத் தலைவர் பண்டிதர் ரெ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில், அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், திருமறைப் பாவோதல், சோடசோபசாரப் பூசை, பன்னிருதிருமுறை பண்ணிசை, சொற்பொழிவு ஆகியன இடம்பெறவுள்ளன.

(உ-18)

# விண்ணேற்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை புனித-மரியாள் ஆலயத்தில் புனிதமரியாளின் விண்ணேற்பு விழாக்கொடியேற்றம் கடந்த 6ஆம் திகதி புதன்கிழமை மாலை பங்குத்தந்தை அருட்திரு ஞானப்பிரகாசம் அடிகள் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து ஆலயத்தில் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு திரு நாள்திருப்பலியும் சொரூபப பவனியும் இடம்பெற்று விழா முடிவடையவுள்ளது.

(உ)

# பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.புனித மரியன்னை பேரவைப் பெருவிழா எதிர் வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் பெருவிழாத் திருப்பலி மற்றும் பவனிமாலை ஆகியன இடம்பெறவுள்ளன.

(உ)

# பொலிஸ் சேவை வெற்றிடங்கள் ஒரு மாதத்திற்குள் நிரப்பப்படும்

(கொழும்பு)

பொலிஸ் சேவையில உள்ள சகல வெற்றிடங்களையும் ஒரு மாதத்திற்குள் நிரப்ப பொலிஸ் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பது பற்றி கடந்த வாரம் பொலிஸ்மா அதிபருடன் பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபயசூரிய கலந்துரையாடியுள்ளார்.

இக்கலந்துரையாடலில் பொலிஸ் சேவையில் பலவருடங்களாக வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருந்து வருகின்றன என்று கூறிய அபயசூரிய அவற்றை நிரப்புவதற்கான அவசர தேவை தற்போது ஏற்பட்டுள்ளதென்று கூறினார்.

அத்துடன் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு புதிய நியமனங்கள் எதையும் மேற்கொள்ள வேண்டியதில்லை என்றும் ஏற்கனவே சேவையில் உள்ளவர்களைக் கொண்டே இவ் வெற்றிடங்ளை நிரப்ப முடியும் என்றும் அவர் பொலிஸ்மா அதிபருக்கு சுட்டிக் காட்டினார்.

(பி-10)

# கொழும்பு கடுவலப் பகுதியில் வர்த்தகர் ஒருவர் சுட்டுக்கொலை

## நேற்று அதிகாலையில் சம்பவம்

(கொழும்பு)

நேற்று அதிகாலை 4.30மணியளவில் கொழும்பு கடுவல என்னும் இடத்திற்கு அண்மையில் வைத்து வர்த்தகர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, கடுவலவிலிருந்து பெற்றாவை நோக்கி அதிகாலையில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே மேற்படிநபர் சுடப்பட்டு ஸ்தலத்திலேயே மரணம்அடைந்துள்ளார்.

ஒரு பிள்ளைக்குத் தந்தையான அசங்க சஞ்சீவன் (வயது 29) என்பவரே கொல்லப்பட்டவர் என இனம்காணப்பட்டுள்ளதாகவும் தற்போது இவரது சடலம் கொழும்பு ஆதாரவைத்திய சாலையில் விசாரணைகளுக்காக வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

அதேசமயம், இக்கொலையை பாதாள உலக கோஷ்டியினரே செயதிருக்கலாம் எனவும் பொலிஸார் கூறியுள்ளதாகத் தெரிய வருகிறது.

(18)

சீன அரசின் நிதியுதவியுடன்

# 15ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கத் திட்டம்

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் 15 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு சீன அரசாங்கம் முன்வந்துள்ளது.வீடுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது.

இவ்வாறு மேற்குப் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் எம்.எச். முஹமட் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டின் பல பாகங்களிலும் வீடுகளற்ற நிலையிலிருக்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் சீன அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படும் இவ் வீட்டு திட்டத்தின் மூலம் பயன் பெறவுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

(கு)

# பசுவதை கொடுமை வேண்டாம்

பசுவதையைக் கைவிடச் செய்வதற்கான ஒரு சட்டமுன் வரைவு விரைவில் இந்தியப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட விருக்கிறது.

பசுவானது மனிதனுக்கு எத்தனையோ விதங்களில் உதவிபுரிகின்றது. அதன் சாணம் உரமாகின்றது. பால் பச்சிளங் குழந்தைகளுக்கு உணவாகுகின்றது. தாய்ப்பாலில்லாத இலட்சக்கணக்கான குழந்தைகள் பசுவின் பாலை நம்பியிருக்கின்றனர்.

இந்து சமயத்தவர்கள் பசுவை தெய்வத்தின் நிலையில் வைத்து வணங்குகிறார்கள். கோமேயம் புனித காரியங்களுக்குப் பயன்படுகின்றது.

இந்த நிலையில் இந்துக்களை பெரும்பான்மையாகக் கொண்ட இந்தியாவில்,பசுவதையைத் தடுக்க முயல்வதில் ஆச்சரியமில்லை.

இந்துக்களும் பௌத்தர்களும் இன்னும் உயிர் வதையை எதிர்க்கும் சமயப் பிரிவுகளும் இந்தியாவில் ஏராளமாக இருந்தபோதிலும் பசுவதையைத் தடுக்கச் சட்டங் கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதுதான் ஆச்சரியத்துக்குரியது.


சில காலத்துக்கு முன் தென்னிலங்கையில் இறைச்சிக்காக கொண்டு செல்லப்பட்ட 8 பசுமாடுகளை விடுவித்து சுதந்திரமாகத் திரிய விட்டதாக ஒரு கிராம சபை அதிகாரிகள் பெருமைப்பட்டுக் கொண்டார்கள்.

ஒரு சமயம் இந்து ஜீவகாருண்ய சபையொன்றின் நிர்வாகிகள் சுவாமிவிவேகானந்தரிடம் சென்று பசுக்கள் வதை செய்யப்படுவதிலிருந்து அவைகளைத்தாம் காப்பாற்றி இருந்த பல சந்தர்ப்பங்களை அவரிடம் பெருமையுடன் எடுத்துக் கூறினார்கள்.

வறுமையிலும் உணவின்றியும் துன்பத்தில் உழல்கின்ற உங்கள்

பயன்பாடு முடிவடைந்ததும் அவை மிகக் குறைந்த வேதனையுடன் அழிக்கப்பட்டுவிடுகின்றன. உணவுக்காகப் பயன்படுத்தப்படுவதில்லை.

பாவம், புண்ணியம் பேசப்படும் நம் நாடுகளில்தான் மிருகங்கள் குறிப்பாக மாடுகள் கூடியவரை பயன்படுத்தப்பட்ட பின்னர் அதன் இறைச்சியையும் கூட விடாமல் அடித்து சாப்பிடும் அல்லது



இறைச்சிக்காக அடிப்பவர்களுக்கு விற்கப்படும் கொடுமை இருந்து வருகின்றது. அதுவும் பால் தரும் பசுவுக்கும் கூட இதே நிலையென்றால் இந்துவாக இருக்கும் ஒருவர் செய்யும் காரியமன்று.

வகையிலும் பயனுள்ளவையாய் இருக்கும் போய்வா'' என்று அவனை அனுப்பிவைத்தார்.

மனிதன் தான் நினைத்தபடி வாழ்ந்தான், சாப்பிட்டான், ஆடினான், பாடினான் எல்லாவற்றையும் அனு பவித்தான். ஆனால் காலப்போக்கில் அவனுக்கு வாழ்க்கையில் சலிப்புத் தட்டத் தொடங்கிவிட்டது. கடவுளிடமே சென்றான்.

''என்ன சந்தோஷமாக இருக்கிறாயா?'' என்று கேட்டார் ஆண்டவர்

''மிகவும் சந்தோஷமாகவிருக்கிறேன் சுவாமி, எல்லா உயிர்

தாண்டவம் தொடங்க கைலாசம் முதற்கொண்டு சகல அண்டங்களும் ஆடத்தொடங்கிவிட்டன.

தேவர்கள் திகைத்துப் போனார்கள். பகவானின் கோபத்துக்குக் காரணம் அறியாமல் விழித்தார்கள். இறுதியில் பூலோகத்தில் அதுவும் தமிழ்நாட்டில் நிஷ்டையிலிருக்கும் திருவள்ளுவரிடம் சென்றால் சிவபெருமானுக்கு ஏன் கோபமூண்டது என்பதை அறியலாம் எனக்கருதி திருவள்ளுவரிடம் வந்தார்கள. அவரிடமே கேட்டார்கள்.

அப்பொழுது தான் நிஷ்டையிலிருந்து விழித்த வள்ளுவப் பெருந்தகை;

**''இழை நக்கி நூல் நெருடும்**
**ஏழையறிவேனோ**
**குழை நக்கும் பிஞ்ஞகன் றன்**
**கூத்து?''**

என்றொரு குறள் பா மூலம் ஒரு கேள்வியை எழுப்பி அழகாக விடையையும் கூறிமுடித்தாராம்.

சிவன் ஏன் ஆடினார் என்பதைக கண்டறியும் தகுதி தமக்குத் தெரியாது என்பது போல் சொல்லி அந்த ஆட்டம் ஏன் நிகழ்ந்தது என்பதையும் இந்தப் பாட்டிலேயே நாசூக்காக வள்ளுர் வெளியிட்டிருப்பது தெரிகிறது.

வள்ளுவரின் குறள் மொழியை ஆராய்ந்து உட்பொருளைத் தெரிந்து சிவபெருமானின்

கோரினார் என்பது வரலாறு.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஹிட்லரும் முஸோலினியும் ஐரோப்பாவிலிருந்து உலகத்தைக கலக்கிய வேளையில் ஆஸியாவின் கிழக்கிலிருந்து ஜப்பான் துரிதகதியில் புறப்பட்டு அதிரடிகளை நடத்தி மேற்குலகைத் திணறடித்தது. மலேசியா, சிங்கப்பூர், பர்மா என்று பல நாடுகளைத் தாக்கியும் கைப்பற்றியும் முன்னேறிக் கொண்டிருந்த ஜப்பானிய விமானப்படைகள், இலங்கையின் கேந்திரத் தன்மையைக் கருதி கொழும்பிலும் திருகோண மலையிலும் குண்டுவீசின. இங்கெல்லாம் பிரிட்டிஷ் படைகள் நிலை கொண்டிருந்தன.

கொழும்பிலிருந்தும் திருகோணமலையிலிருந்தும் ஏராளமான மக்கள் பாதுகாப்புக் கருதி வீடுகளையும் வியாபார ஸ்தாபனங்கள், தொழில் நிலையங்களையும் கைவிட்டுத்தூர இடங்களுக்கு ஓடினார்கள்.

அப்படி ஓடியவர்களின் பொருள்களையும் வீடுகளையும் அபகரித்துக்கொண்ட அனேகர், பிற்காலத்தில் கொழும்பிலும் பிற இடங்களிலும் பெரும்பணக்காரர்களாக முன்னேறி பெரும் புள்ளிகளாக மாறிவிட்டார்கள் என்பதெல்லாம் பழைய கதைகள்.

அந்தக் காலத்தில் யுத்தக் கெடு பிடிகளின் போது இலங்கையின் மீது அக்கறை கொண்டிருந்த ஜப்பான், அமெரிக்க அணுகுண்டு வீச்சின் பின்னர் அதனிடம் சரணாகதியடைந்தது.

ஆனால் இப்பொழுது 20ஆண்டு கால உள்நாட்டு யுத்தத்தின் பின்

# அணு குண்டினால் ஏற்பட்ட அழிவுகள்

இப்படியானவர்களுக்கு கோயில் ஏன், குளம் ஏன்?

முன்னர் எல்லாம் சில குடும்பங்கள் பசுப் பாலையே முதலீடாக வைத்து வாழ்ந்துவந்தன. பால் விற்பனை, எருதுக் கன்றுகள்

# அன்றும் இன்றும்

சகோதரர்கள் எத்தனைபேரைக் காப்பாற்றியிருக்கிறீர்கள்? என்று சுவாமிஜி அந்தப்புண்ணியவான்களிடம் திருப்பிக் கேட்டார்.

மிருகங்களைக் காப்பாற்ற

விற்பனை, எரு விற்பனை என பசுவின் பயனைப்பெற்று முன்னேறிய குடும்பங்கள் பலவுண்டு. இவர்கள் தாம் வளர்க்கும் பசு மாடுகள் தளர்ந்து போனபின் இயற்

களும், எல்லா பொருள்களும் எனகுப் பணிவிடை செய்கின்றன. ஆனால் இது எனக்கு ''போரடிக்குது நானும் மாற்றிப்பணிவிடை செய்யக்கூடியதாக ஏதும் செய்ய முடியாதா?'' என்று கேட்டான்.

மனிதனின் அற்பபுத்தியைக் கண்டு கடவுளுக்குக் கோபம் தான் வந்தது

உடனே ஒரு பெண்ணைப் படைத்தார் ''இந்தா தொலைந்துபோ'' என்று கூறி அனுப்பி வைத்தார்.

''அன்று அடிமையானவன் தான் இன்றும் அதே நிலையில் கிடந்து உழல்கிறான்'' என்று நண்பர் கூறிமுடித்தார்.

இந்தக் கதை உண்மையில் ஏதோ ஆண்கள் எல்லாருமே பெண்களுக்கு அடிமைகளாகி விட்டது போலவும்,பெண்கள் தான் உலகத்தில் கோலோச்சுவது போலவும் காட்டுகிறது.

சில குடும்பங்களில் அப்படி இருக்கலாம், ஆனால் பொதுவில் சமுதாயத்தில் ஆண்களின் ஆளு

கூத்துக்கான காரணத்தைக் கண்டுபிடித்து அதன் பேரில் அவரது கோபத்தைத் தணித்து அண்டங்களை அழிவிலிருந்து காத்துக் கொண்டார்களாம் தேவர்கள்.

ஆன் லெவின் (**Ann Lewin**) என்ற கவிஞர் கடவுள் மனிதனுக்கு இசையையும், நகைச்சுவை உணர்வையும் படைத்தளித்தமையைப பின்வருமாறு கூறியுள்ளார்.

ஆகாயத்தையும் பூமியையும் படைத்து முடித்த இறைவன், அன்று இரவு சாமத்தில் கண் விழித்தார். படைக்கப்பட்ட அனைத்தின் மீதும் ஆளுமை செலுத்துவதென்பது மனிதனுக்குப் பெரிய பாரமான வேலையாக இருக்கப் போகின்றதே, அதனால் அவர்கள் மிகவும் அந்தரப்பட்டுப் போவார்கள். எனவே அவர்களின் கடமைகளை இலகுவாக்கி ,மகிழ்ச்சியுடனிருப்பதற்காக அவர்களுக்கு இசையையும் நகைச்சுவை உணர்வையும் வழங்குவோம் என்று தீர்மானித்து அதை வழங்கியபின் நிம்மதியாக நித்திரையில் ஆழ்ந்தார்.

## அழிக்கமுடியாத அழிவு சக்தி அணுகுண்டு

ஜப்பானில் இரு நகரங்களில் அமெரிக்கா அணுகுண்டு வீசிய 58வது நினைவுதினம் 6ம் திகதி ஜப்பானில் அனுஷ்டிக்கப்பட்டது.

1945ம் ஆண்டு ஆகஸ்ட் 6ம் திகதி ஹிரோஷிமாவிலும் மூன்று தினங்களில் நாகசாகியிலும் அணுகுண்டு வீசப்பட்டது.

இந்த நகரங்கள் தரையோடு தரையானதுடன், எரிந்து சாம்பலாகின. மூன்று லட்சம் பேருக்குமேல் பலியானார்கள். அதிர்வுகளினாலும், வாயுக்களை சுவாசித்ததினாலும் தூர இடங்களில் இருந்த அனேகர் பாதிக்கப்பட்டார்கள். அக்காலத்தில் தாயமாரின் வயிற்றில் இருந்த குழந்தைகளும் கூட பாதிக்கப்பட்டிருந்தன.

ஆயிரக்கணக்கானவர்கள் கப்பல்களில் அகதிகளாக அமெரிக்காவுக்கு ஓடினார்கள்.

அமெரிக்காவுக்கு வந்த ஜப்பானிய அகதிகளைப் போய்ச்சந்தித்த அணு விஞ்ஞானி ஜன்ஸ்ரீன் கண்ணீர் மல்க மன்னிப்புக்

னர் ஜப்பான் மீண்டும் இலங்கையின் விவகாரங்களில் பெரிதும் அக்கறை கொண்டிருப்பது எதைக காட்டுகிறது?

இலங்கையில் மீண்டும் அமைதி ஏற்பட்டு இந்த நாட்டு மக்கள் எல்லோரும் நல்லிணக்கத்தோடு கூடிவாழ உதவவேண்டும் என்ற நல்லெண்ணம் என்று இதைக் கொள்ளலாமா? எது வானாலும் பின்வரும் பின்னணிகளை ஜப்பானின் இன்றைய அதிதீவிர அக்கறையோடு இணைத்துப்பார்க்க மனம் தூண்டுகிறது.

இலங்கைக்கு பலகோடி அமெரிக்க டொலர்களை வாரி வழங்க உதவி வழங்கும் நாடுகள் தீர்மானம் எடுத்தது ஜப்பானில். அந்தக் கூட்டத்திற்கு பின்னணி அமெரிக்கா. அதற்கு அனுசரணை ஜப்பான்.

இலங்கையும் ஜப்பானும் பௌத்த கலாசாரத்தைப் பேணும் நாடுகள். பௌத்த தலைவர்கள் அங்கிருந்து இங்கும், இங்கிருந்து அங்கும் போய்வருகிறார்கள்.

அமெரிக்காவின் மிக நெருங்கிய நட்பு நாடு ஜப்பான்.

ஐ.நா.பாதுகாப்புச்சபையில் ஆஸிய நாடொன்றுக்கு நிரந்தர உறுப்புரிமை ஏற்படுத்தும் முயற்சி நடைபெற்றுவருகிறது. அந்தப் பதவியில் இந்தியாவுக்கு ஒரு கண் உண்டு. அதற்காக சில சில முயற்சிகளையும் எடுத்துவருகின்றது. அந்த இடத்துக்கு ஜப்பானை முன் தள்ளுவதற்கு அமெரிக்கா விருமபலாம் அல்லவா?

இலங்கையில் அமைதியை ஏற்படுத்த முன்பொருமுறை முயன்று தோல்வி கண்ட இந்தியாவைப் பின்தள்ளி, அமெரிக்காவின் ஆதரவுடன் இலங்கையில் அமைதியை ஏற்படுத்த ஜப்பான் உதவுமானால், இப்பிரதேசத்தில் ஜப்பானின செல்வாக்கு அதிகரிக் கலாம். அதன் மூலம் பாதுகாப்புச் சபையில் நிரந்தரமாக உட்கார்ந்து கொள்ள வாய்ப் பேற்படுமா என் றும் ஜப்பான் யோசிக்கலாம். எது வும் எப்படியும் போகட்டும், நமக்கு இப்போது இங்கு நிரந்தர அமைதியேற்பட வழியேற்பட்டால் சரி.

**- அன்பன் -**

# ஜப்பானுக்கு ஏன் இந்த அக்கறை?

வேண்டியதுதான்.

ஆனால் அதைவிடக் கேவலமான நிலையில் மனிதர்கள் உழல்கிறார்களே அவர்களுக்கு உதவினீர்களா என்பதே சுவாமிஜியின் கேள்வி.

இலங்கையில் மாடுகளை இறைச்சிக்காக அடிப்பதை நிறுத்துவதற்காக பல வருடங்களுக்கு முன்பு பெரும் இயக்கம் ஒன்று நடத் தப்பட்டது. தென்னிலங்கையில் அனேக இடங்களில் மாட்டிறைச்சி சாப்பிடுவது நிறுத்தப்பட்டது. ஒரு சிறிது காலம் தான். பின்னர் மீண்டும் முன்னரைவிட மோசமான நிலை ஏற்பட்டது.

வெளிநாடுகளில் குறிப்பாக மேலைநாடுகளில் இறைச்சிக்கென்றே மாடுகளை வளர்க்கிறார்கள், இறைச்சிக்காக கோழிகள் வளர்க்கப்படுவது போல.

வயல்களில் வேலை செய்யவும், பால்கறக்கவும் இன விருத்திக்கும் வெவ்வேறாக மாடுகள் வளர்க்கப்படுகின்றன. இவ்வித

கையாகவே அவை இறந்த போகும் வரை பராமரிப்பார்கள். சிலர் கோயில்களில் கொண்டுபோய் கோயில் தேவைக்கென விட்டுவிடுவார்கள்

ஆனால் பசுவின் பயனை முடிந்தவரை கறந்து விட்டு, இறுதிக் காலத்தில் இறைச்சிக்காக விற்பவர்களும் இல்லாமலில்லை.

## ஏன்படைத்தான் இறைவன்

''பெண்களை ஏன் இறைவன் படைத்தான் தெரியுமா?''என்று ஒரு நண்பர் கேட்டார்.

''தெரியாது, இறைவனிடம் தான் கேட்டுப்பார்க்க வேண்டும்'' என்றேன் நான்

''நான் சொல்கிறேன் கேளும்'' என்று கூறிவிட்டு அவர் தொடர்ந்தார்.

''உலகம் முழுவதையும் படைத்த இறைவன், மனிதனையும் படைத்துவிட்டு இவை அனைத்தும் உனக்குத்தான் அவை உனக்கு எல்லா

மைதான் மேலோங்கி நிற்கிறது. பெரும்பாலும் பெண்கள் அடக்கி ஆளப்படுபவர்களாகவே காணப்படுகிறார்கள்.

## இறைவன் ஆடிய ஆட்டம்

கைலாயத்தில் ஒருமுறை சிவ பெருமானும் உமாதேவியாரும் நடனமாடி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். நாட்டியக்கலையில் இருவருமே ஒருவருக்கொருவர் இணையானவர்களே என்பதால், நளினமாக ஆரம்பித்த நடனம் போட்டியாக மாறியது. பெருமான் ஆடிய வேகத்தில் அவரது காதில் இருந்த குண்டலம் கழன்று நிலத்தில் வீழ்ந்தது. அதனை உமாதேவியார்,

ஆடியபடியே கால் விரல்களால் எடுத்து பெருமானின் முன் காட்ட ஆடிக்கொண்டிருந்த அவரின் உதடுகள் அந்த ஆபரணத்தின் மீது பட, அவர் வெகுண்டு

# மாகாண சபைகளை கலைத்து அவசர தேர்தல் நடத்த வேண்டியதில்லை

## பொ.ஐ.மு.பொதுச் செயலாளர்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்கள் யாவும் அடுத்த வருடம் மார்ச் மாதமே நடத்தப்படும் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டீ.எம். ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல்கள் விரைவில் நடத்தப்படும் என வெளிவந்த செய்திகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைகளைக் கலைத்து விடடு அவசர தேர்தல் ஒன்றை நடத்த வேண்டிய தேவை தற்போது ஏற்படவில்லை.

சட்டரீதியாக மாகாண சபைகளின் ஆயுட்காலம் முடிவடைந்த பின்னரே அவற்றிற்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றார்.

இதேவேளை,சகல மாகாண சபைகளையும் ஒரே நேரத்தில் கலைப்பது குறித்து இதுவரை தீர்மானிக்கப்படாவிட்டாலும் அத்தகைய தீர்மானத்தை பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக்குழு தேவைப்படின் எடுக்கும் என்றும் அவர் மேலும தெரிவித்தார். (பி-10)

# சிவகுருநாதனின் மறைவுக்கு அமைச்சர் மகேஸ்வரன் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

மூத்த தமிழ்ப் பத்திரிகையாளரும் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் மதிப்புக்குரிய தலைவருமாகிய அமரர் இ.சிவகுருநாதனின் மறைவு அறிந்து மிகுந்த கவலையடைகிறேன். சிவகுருநாதன் ஒரு தலைசிறந்த பத்திரிகையாளராக- இலங்கை சட்டக்கல்லூரியின் மூத்த விரிவுரையாளராக- கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் செயற்திறன் மிக்க தலைவராக சுமார் அரை நூற்றாண்டு காலமாக பல தரப்பட்ட பணிகளிலும் பொறுப்புடன் செயற்பட்டு தமிழ் மக்களுக்கு அவர் ஆற்றியுள்ள சேவைகள் வரலாற்றில் நிலைத்து நிற்கும் என்பதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமில்லை என்று இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் மூத்த பத்திரிகையாளர் இ. சிவகுருநாதன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைசிறந்த பண்பாளராக அந்தஸ்து பதவி வேறுபாடுகளின்றி எவருடனும் இனிமையாகப் பழகும் சுபாவமுள்ள சிவகுருநாதன் அர்ப்பணிப்புடன் ஆற்றிய சேவைகளை தமிழ்ச்சமூகமும் இந்து சமூகமும் நனறியுணர்வுடன் நினைவுகூருவார்கள் என்பது உறுதி. தலைநகரில் வாழ்கின்ற இலட்சக்கணக்கான தமிழ் மக்களுக்கு அவரது மறைவு பாரிய இழப்பாகும். அவரினால் உருவாக்கப்பட்ட ஊடகவியலாளர்களும் சட்டமாணவர்களும் அவரது புகழை நிலைநாட்டுவார்கள். இலங்கைத் தமிழ் மக்களின் அமைச்சர் என்ற வகையில் அன்னாரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அவரின் ஆயிரக்கணக்கான நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத்தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அமைச்சர் தமது செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(பி)

### தண்ணீர் முறிப்புக் கிராமத்தில்

# அடிப்படை வசதிகளின்றி அல்லல்படும் மக்கள்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு தண்ணீர் முறிப்புக்கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் எதுவித அடிப்படை வசதிகளுமின்றி அல்லல்படுகின்றனர்.

இடம்பெயர்வுக்காலத்தில் 30 ஆகக் காணப்பட்ட குடும்ப எண்ணிக்கை தற்போது 150 ஆகஅதிகரித்திருக்கலாம் எனக் கணிப்பீடு ஒன்று தெரிவிக்கின்றது.

இப்போது 9 குடும்பங்களே மீளக் குடியேறியுள்ளன.இக் குடும்பங்களுக்கு இதுவரை எந்த நிறுவனங்களும் எதுவித உதவிகளையும் செய்யவில்லை எனவும் இதனால் எஞ்சிய குடும்பங்கள் மீளக்குடியேறுவதற்குத் தயக்கம் காட்டுவதாகவும் தெரியவருகிறது.

அத்துடன், இப்பகுதியில் பாடசாலைகள் எதுவும் இயங்காத நிலையில் இங்கு மீளக் குடியேறிய 9 குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும தொலைவில் உள்ள குமிழமுனைப் பாடசாலைக்கே செல்லவேண்டிய நிலை உள்ளது.

மேலும், மருத்துவ வசதிகளும் அற்றுக் காணப்படுவதுடன், போக்குவரத்துப்பாதைகளும் சீரின்றிக் காணப்படுகின்றன.

அடிப்படை வசதிகள் போக்குவரத்து மற்றும் மருத்துவ வசதிகள் எதுவுமின்றித் தாம் இப்பகுதியில் மீளக் குடியேற முடியாத நிலை தொடர்ந்து வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (தி-8)

# அரசியல் பழிவாங்கல் தொடர்பான முறைப்பாட்டு விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

அரசியல்பழிவாங்கல் தொடர்பாக கடந்த 7 வருடங்களில் சுமார் 12 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதென அரசாங்க சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசாங்க சேவைகளிலுள்ளவர்கள் தெரிவித்துள்ள இம் முறைப்பாடுகள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்க சேவையினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2002 ஆம் ஆண்டிற்கான அறிக்கையிலேயே இவ்விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (பி-10)

### தீவக வைத்தியசாலைகளில்

# தகுதி வாய்ந்த மருத்துவர் இன்றி நோயாளர் பெரும் அவலம்


(வேலணை)

தீவகத்திலும் ஊர்காவற்றுறை, வேலணை போன்ற இடங்களிலுமுள்ள அரச வைத்தியசாலைகளில் தகுதி வாய்ந்த மருத்துவ நிபுணர்கள் பற்றாக்குறை நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதிகளில் உதவி மருத்துவர்களும்,பதிவு மருத்துவர்களும் மட்டு மே கடமையாற்றி வருகின்ற நிலையில் மாவட்ட வைத்திய அதிகாரிகளோ அன்றி தகுதி வாய்ந்த மருத்துவ அதிகாரிகளோ இல்லாத நிலையில் கடும் சுகவீனமுற்றவர்களை தனியார் வாகனம் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டிய அவல நிலை தொடர்கிறது.

அத்துடன் உதவி மருத்துவ அதிகாரிகளுக்கும் இங்கு தட்டுப்பாடு நிலவுகிறது.இக்குறைபாட்டினால் தீவகத்தில் உள்ள நோயாளர்கள் அதிக பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (பி-47)

### அம்மையாருக்கும் பழக்கி விட்டார்கள்....!




# பேச்சுவார்த்தைகளை மீண்டும் முன்னெடுப்பதற்கு பிரான்ஸ் ஒரு போதும் தடையாக இருக்காது

## பிரான்ஸ் வெளியுறவு அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் வழங்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபு சம்பந்தமாக லண்டனிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் பிரான்ஸில் வைத்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் பேச்சுவார்த்தையை நடாத்துவதற்குஅந் நாட்டின் வெளியுறவு அமைச்சின் செயலாளர் தமது அனுமதியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் வழங்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை திட்டவரைபு குறித்து பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு சு.ப. தமிழ்ச் செல்வன் பிரான்ஸ் நாட்டிற்குச் செல்லவிருப்பதாக வெளிவந்த செய்திகள் குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவிந்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும கருத்துக் கூறுகையில், இலங்கை அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தற்போது முடங்கியிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

அவ்வாறானதோர் முன்னேற்றகரமான பேச்சுவார்த்தைகளுக் குரிய ஓர் முன் ஆயத்தப் பேச்சுவார்த்தை பிரான்ஸில் வைத்து நடாத்தப்படுமானால் அதற்கு பிரான்ஸ் தடை ஏதும விதிக்காது எனவும் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபு குறித்து விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் , சட்ட ஆலோசகர் உருத்திரகுமார் மற்றும் அரசியல் சட்ட அறிஞர்கள் பலருடனும் ஆராய்ந்து திருத்தியமைக்கப்பட்டதொரு வட - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபை வழங்கும் நோக்கில் பிரான்ஸில் பேச்சு வார்த்தை நடாத்துவதற்கு நாம் மகிழ்ச்சி யடைகிறோம். அதற்கு எதுவித தடையையும் எமது அர சாங்கம் விதிக்காது என மேலும் தெரிவித்துள்ளார். (பி-18)

# நாட்டைத் துண்டாடும் சாத்தியக் கூறுகள் அதிகரித்தே காணப்படுகின்றன

## ஜே.வி.பி. செயலாளர் கவலை

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபையை அமைக்கும் நோக்கில் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் அரசாங்கத்தினால் பாரிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் இலங்கை துண்டாடப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன என ஜே.வி.பி. யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கூறியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நிப்பொன் ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கூறுகையில், விடுதலைப்புலிகளுக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசு இடைக்கால அரச நிர்வாகத்தை வழங்கிவிட்டது. இதற்குப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நாளிலிருந்து இன்று வரை விடுதலைப்புலிகள் உடன்படிக்கையை மீறும் செயல்களைப் புரிந்து வருகின்றனர். ஆயினும் அரசு இவற்றைக் கண்டு கொள்ளாதிருப்பதுடன், ஏதாவதொரு காரணத்தைக் கூறி விடுதலைப்புலிகளுக்குச் சாதகமான பதிலையே கூறி வருகின்றது.

கிழக்குப் பிரதேசத்தில் புலிகள் தமது இடப்பரப்பினை விஸ்தரித்து வருகின்றனர். அத்துடன் கிழக்குப் பிரதேசத்தில் பெரும்பான்மையாக வாழ்கின்ற முஸ்லிம் மக்களுக்கும் அநீதிகள் இழைக்கப்பட்டு வருகின்றன.

சிலர் வெறும் அமைச்சுப் பதவிகளுக்காக இது குறித்து அரசிற்கு எதுவித அழுத்தமும் கொடுக்காதுள்ளனர். இதனால் புலிகளின் அராஜகம் மேலும் அதிகரித்து வருகின்றது என்றார்.

அத்துடன் இடைக்கால நிர்வாக சபை என்ற போர்வையில் புலிகளுக்கு இடைக்கால அரச நிர்வாகத்தை வழங்க வென அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் எதிர்ப்புப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றோம் என்றும் கூறினார். (பி-8)

# அரசின் நடவடிக்கைகளை எதிர்த்து ஜே.வி.பி. நாளை ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாக சபையை வழங்க அரசு முன்வந்திருப்பதைக் கண்டித்தும், சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடருவதற்கு வெளிநாட்டு உதவியைக்கோரி வருவதைக் கண்டித்தும் நாளை செவ்வாய்க்கிழமை ஜே.வி.பி. கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

இதேவேளை, இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொள்வார்கள் என்றும், இப்பேரணி எங்கு நடைபெறும் என்பது இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என்றும் ஜே.வி.பியின் ஊடகப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ் ஆர்ப்பாட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள் எனவும் இவர்களுக்கான அழைப்புக்கள் ஏற்கனவே ஜே.வி.பி.யினரால் விடுக்கப்பட்டதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேசமயம் கடந்த 6ஆம்திகதி முதல் ஜே.வி.பி.யினர் ஒவ்வொரு கிராமங்கள் தோறும் சென்று இவ் ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டு வருவதாகவும் அரசிற்கு எதிரான பிரசாரங்களில் இவர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருதாகவும் கூறப்படுகிறது. (10)

# செய்தித் துளிகள்

## வீட்டுத் தேவை பொருட்கள் வழங்கப்பட்டன

(பளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அரசர்கேணி கச்சார்வெளி இத்தாவில் முல்லையடி தர்மக் கேணி ஆகிய ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளில் வசித்து வரும் குடும்பங்களுக்கு சேவலங்கா நிறுவனத்தால் கடந்த மாதம் மண்வெட்டி, கோடரி, குப்பைவாரி, அலவாங்கு, அரிவாள், கத்தி போன்ற பொருட்கள் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவகையில் வழங்கப்பட்டன. (பி-97)

## பயனாளிகளை தெரிவுசெய்கின்றனர்

(ஊர்காவற்றுறை)

பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் ஊர்காவற்றுறை, தம்பாட்டி, கிராம அலுவலர் பிரிவில் பல்வேறு உதவிகள் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் முகமாக மேற்படி நிறுவனத்தினால் உதவிகள் வழங்குவதற்கான பயனாளிகளினைத் தெரிவுசெய்வதில் குறிப்பிட்ட நிறுவனத்தின் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றார்கள். (பி-75)

## முன்பள்ளிசிறாருக்கு சத்துணவு

(பளை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி அகதிகள் அபிவிருத்திப் புனர்வாழ்வு கழகத்தினால் நடாத்தப்பட்டுவருகின்ற 20முன்பள்ளிச் சிறார்களுக்குப் போஷாக்குச் சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றது.

இவற்றில் 12 முன்பள்ளிகளைச் சேர்ந்த 217 சிறார்களுக்கு உலக தர்சன நிறுவனமும் மற்றும் 8முன்பள்ளிகளைச் சேர்ந்த 108 சிறார்களுக்கு யாழ்.கியூடெக் நிறுவனமும் போஷாக்குச் சத்துணவினை வழங்கி வருவதாக பச்சிலைப்பள்ளி பளை அகதிகள் அபிவிருத்திப் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (பி-97)

## மலையகத்தில் 500வீட்டுத்திட்டம்

(கொழும்பு)

பெருந்தோட்டப் பகுதிகளில் தேசிய அபிவிருத்தி அதிகார சபையும், வீடமைப்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனமும் இணைந்து 500 வீடுகளை அமைக்கவுள்ளன.

இதற்கான பணிப்புரைகளை பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் விடுத்துள்ளார்.

கண்டி, நுவரெலியா, பதுளை ஆகிய இடங்களில் இவ்வீடுகள் அமைக்கப்படவுள்ளன. (தி)

## கத்திக் குத்தில் கல்முனைவாசி பலி

(கொழும்பு)

கலமுனை கடற்கரைப் பகுதியில் நேற்று அதிகாலை குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபரின் சடலம் கடற்கரைப் பகுதியில் இருந்து பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் தொடாபாக தீவிர விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (பி-10)

## கல்வீச்சு

(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாக நல்லூர் கோவில் வீதியில் ஜீ.ரீ.சற்றுக்கு முன்பாக உள்ள சில வீடுகளுக்கு இரவு நேரம் இனம்தெரியாதோர் கல்வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் பொதுமககள் விசனம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கபபடுகின்றது. இக் கல்வீச்சுச் சம்பவத்தினால் வீட்டு ஓடுகளும், யன்னல் கண்ணாடிகளும் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பி)

## நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரியினால் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்திற்கு வேண்டிய நூல்களைக் கொள்வனவு செய்வதற்கு 50ஆயிரம் ரூபாவும், கொட்டடி முத்தமிழ் சனசமூக நிலையம், கொட்டடி கற்குளம் ஸ்ரார் சனசமூகநிலையம், நவாந்துறை கலைவாணி சனசமூகநிலையம், கொட்டடி கண்ணபுரம் சனசமூக நிலையம் ஆகியவற்றின் நிர்வாகத்தின் கீழுள்ள முன்பள்ளிகளுக்கு தளபாட கொள்வனவிற்காக தலா 25ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (உ)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தொழில்துறைத் திணைக்கள அலுவலர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அனைத்து அலுவலர்களையும் தவறாது சமுகம் அளிக்கும்படி மாவட்ட அலுவலர் திருமதி பொ.பௌராஜ் கேட்டுள்ளார். (உ-7)

## மட்டுவில் பாடசாலைக்கு நூலகம்

(பருத்தித்துறை)

மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயத்திற்கு நூலகம் மற்றும் ஆய்வுகூடம் ஆகிவற்றை நிர்மாணிப்பதறகான நடவடிக்கைகளை கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இவ்வித்தியாலய வகுப்பறைக் கட்டடமொன்றை 7 இலட்சம் ரூபா செலவில அமைத்துக் கொடுத்துள்ள ஜீ.ரீ.சற்.நிறுவனம், வேண்டிய தளபாடங்களையும் மலசல கூடங்களையும் அமைத்துக் கொடுத்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-52)

## ச.ச.நிலையங்கள் செயலிழப்பு

(நவக்கிரி)

அச்சுவேலி மேற்குப் பகுதியில் உள்ள இரு சனசமூக நிலையங்களும் இயங்காது இருப்பது குறித்து அப்பகுதி மக்கள் பெரும் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேற்படி இரு சனசமூக நிலையங்களையும் உடன் இயங்க வழிவகைசெய்ய வேண்டும் என இப்பகுதி மக்கள் ஏற்கனவே சம்பந்தப்பட்டவர்களை கோரிஇருந்தனர்.

ஆயினும் இதுவரை அவற்றை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. (உ-233)

## வீதி நாடகம்

(ஊர்காவற்றுறை)

தமிழீழ கலைபண்பாட்டுக் கழகத்தின் புதுவை அன்பனின் நெறியாள்கையில் உருவான ''நாம் யார்க்கும் குடியல்லோம்'' என்னும் வீரமுரசு வீதிநாடகம் தீவகத்தில் பரவலாக மேடையேற்றப்பட்டு வருகின்றது. (பி-75)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(சுதுமலை)

வலிகாமம் தென்மேற்குப் பகுதியில் உள்ள ஆனைக்கோட்டை உப அலுவலகப்பிரிவில் இவ்வாரம் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் பணி நடைபெறவுள்ளதாக அப்பகுதிகளின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அறிவித்துள்ளனர்.

இதன பிரகாரம் எதிர்வரும் 14ஆம் திகதி சுதுமலை சாவலகட்டுப் பகுதியிலும்,13ஆம் திகதிஆனைக்கோட்டை காக்கைதிவுப் பகுதியிலும், 15ஆம் திகதி நவாலிச் சந்தைப்பகுதியிலும் கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படவுள்ளன.

என்வே, பொதுமக்கள் தமது வளர்ப்பு நாய்களைக்கட்டி வளர்க்குமாறு சம்பந்தப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அறிவித்துள்ளார்கள். (252)

## உத்தியோகத்தர் இடமாற்றம்

(பளை)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய ச.சோமசுந்தரம் முதலாம் திகதியிலிருந்து வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகவும் பதில் பிரதேச செயலராகவும் கடமையாற்றிய எஸ்சிவபுண்ணியம் ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்து, அந்த இடத்திற்கு இவர் இடமாற்றம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி-97)

## விழிப்புணர்வுப் பிரசாரம்

(சுதுமலை)

சுதுமலை தாவடிப்பகுதியில் டெங்குக் காய்ச்சலினால் சிலர் பாதிக்கப்பட்டதை அடுத்து, அப்பகுதியில் இக்காய்ச்சல் தொடர்பாக விழிப்பாக இருக்குமாறு கடந்த சில நாட்களாக ஒலிபெருக்கி மூலம் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது.

மக்களைத் தங்கள் வீடுகளிலும் சுற்றுப்புறங்களிலும் உள்ள கழிவு நீர் பெருகவிடாது தடுத்து, நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துமாறும் டெங்கின் அறிகுறிகள் இனம்காணப்பட்டதும் உடனடியாக வைத்தியசாலைக்கு செல்லுமாறும் மேற்படி பிரசாரத்தில் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் இப்பகுதியில் சில வீடுகளிற்கு சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்கள் சென்று அண்மையில் பெய்த மழைநீர் தேங்கியுள்ள சிறிய பேணிகள், தகரங்கள், போத்தல்கள என்பவற்றில் நுளம்பின் பெருக்கத்தை இனம்கண்டு அவற்றை அழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும தெரியவருகிறது. (252)

## வீரமுரசு வார அரங்கு

(யாழ்ப்பாணம்)

பிரதேச ரீதியாக இடம்பெற்றுவரும் வரமுரசு கலையரங்கு நிகழ்வு இன்று அனலைதவு ஐயனார் ஆலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (பி-10)

## இறுவட்டுகள் பறிமுதல்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்யப்படவிருந்த தமிழ் திரைப்படங்களின் இறுவட்டுக்களை கொழும்பு கொம்பனித்தெரு பொலிஸார் கடந்த வெள்ளியன்று கைப்பற்றியுள்ளனர்.

புதிய திரைப்படங்களை வெளியிடுவதற்கான அங்கீகாரம் பெற்ற இரு கொம்பனிகள் செய்த முறைப்பாட்டை அடுத்து, நீதிமன்றத்தின் அனுமதியுடன் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது (தி)

## அவசர கடிதம் அனுப்பிவைப்பு

(சுதுமலை)

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் பிரான்பற்று கல்வி மேம்பாட்டுக் கழகத்தினை யாழ்.மாவட்டத்திலுள்ள கல்வி மேம்பாட்டுக் கழகத்தில் பதிவுசெய்வதற்கு ஆவன செய்யக்கோரி அவசர கடிதம் ஒன்றை சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கு வலி.தென்மேற்கு பிரதேசசபை செயலாளர் அனுப்பிவைத்துள்ளார்.

மிகவும் பின்தங்கிய கிராமங்களான இளவாலை, மாதகல், பிரான்பற்று, சங்கானை ஆகிய பகுதிகளில் மாணவர்களுக்கு மேற்படி கல்வி மேம்பாடடுக் கழகம் இலவச கணனி மற்றும் க.பொ.த.(உ/த),(சா/த)வகுப்புக்களையும் பல இடர்களின் மததியிலும் சிறப்பான சேவையை வழங்கி வருவதாகவும். இக்கழகத்தின் மூலம் பல மாணவர்கள் பயனடைந்துள்ளதாகவும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (252)

# நல்லூரான் திருவடிக்கு

(இன்று ஒன்பதாம் திருவிழா)



## கண் திறந்து பார்க்கவேண்டும்!

வள்ளி தெய்வானையோடு வண்ணமயில் மேலேறி
சேவல் கொடியுடனே வேலாட்சி புரிபவனே
பார்வதி மைந்தனே எம் அலங்காரக் கந்தனே
காசினியில் மாசினை நீக்கிடவே
வெண்புறாக்கள் வட்டமிடும் சோலைவனமாக மாற
கண்திறந்து பார்க்க வரம் அருளிட வேண்டும்

- சி.திருச்செந்தூரன்

## நல்லவரம் பெறுவோம்

நல்லை நகர் வாசஞ் செய்வோன்
நல்கிடுவான் நமக்கருளை
போற்றிடுவோம் அவன் நாமத்தை
போக்கிடுவான் எம்மிடரை
ஒளி வீசும் அவன் வேலதனை கண்டால்
ஒளித்திடுவர் வீணரெல்லாம்
நல்லூரான் காலத்தில் நல்லாக நோன்பிருந்து
நல்லவரம் பெற்றிடுவோம் நாமே

- சி.தவசீலன் பெரியமாவடியூரான்

## மழையாய் அருளைப் பொழிவாய்

அழகுத் தமிழே அன்புத் தமிழே!
அரன்மக னின் தமிழே!
பழகும் மொழியிற் பாடல்கள் செய்துனைப்
பணிவார் பற்பல நாம
விழையும் பொருள்வே றுளதோ முருகா!
வேற்படை தாங்கி யவா
மழையாய்க் கருணை பொழிவாய் எங்கள்
மாநகர் நல்லை யிலே

-சொக்கன்-

## தினம் வாருங்கள்

நல்லைப்பதி நலம் நாடும் பதி!
நல்லோரும் வல்லோரும் கூடும் பதி!
நற்தவத்தோர் ஞானிகளைநாம் காணும்பதி!
நற்குணங்கள் உடையவர்கள் சேரும்பதி!

கந்தனின் அருள் பெற தினமும் நாடுங்கள்!
கந்தனே கடம்பனே என்று கூறுங்கள்!
கதிர்வேலன் அருள்பெறத் தினமும் வாருங்கள்!
கந்தனின் அருளைப் பெறத் தினமும்வாருங்கள்!

- பா.திருக்குமார்

## எண் திசையும் வேலொளியே

முற்றமதில் வெண்மணலும் முருகனுறை பதியழகும்
மயிலழகன் மணியொலியும் மூர்த்திகர பாட்டொலியும்
சுற்றமெலாம் கோடியுடன் பு,ச்சூடி பாடிவர
சொரிவாயே தேனினிய அமுதத்தை நாவினிலே!
வற்றாத நெய்விளக்கில் வாழும்நல் லூரானே
வாடிய மனங்களிலே விடிவொன்று விளையாதோ?
அற்புதனே! எண்திசையும் வேலொளியை தருபவனே
ஏற்பாயெம் குறையதனை ஆற்றிடுவாய் நல்வாழ்வை

-அல்வையு,ர் இரா. அருள்ராஜ்

# அயோத்தியில் இராமர் ஆலயம் கட்ட வசதியாக சட்டம் இயற்ற முடியாது

## வி.எச்.பி.கோரிக்கைக்கு அத்வானி மறுப்பு

(சென்னை)

அயோத்தியில் இராமர் ஆலயம கட்ட இசைவாகச் சட்டம் இயற்ற வேண்டுமென்ற விஷ்வஹிந்துப் பரிசத்தின் கோரிக்கையை துணைப்பிரதமர் எல்.கே.அத்வானி நிராகரித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு சிறிதளவும் சாத்தியமே இல்லாத மசோதாவைக் கொண்டுவர இயலாது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இது விடயத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியின் உறுப்புக் கட்சிகளிடம் கருத்தொற்றுமை இல்லை காங்கிரஸ் கட்சியும் இதுபோன்ற கட்டத்தை ஆதரிக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே ஒட்டுமொத்தமாக அரசியல் கட்சிகளிடம் கருத்தொற்றுமை அயோத்தியில் கோயில் கட்டுவதற்கு சட்டம் இயற்றுவதற்கான அரசாங்கத்தை பலிகொடுக்க முடியாது என்றும் அத்வானி கூறினார்.

**வி.எச்.பி கண்டனம்**

அத்வானி இந்திய பாராளுமன்றில் வெளியிட்டுள்ள கருத்துக்களை விஷ்வஹிந்துப்பரிசித் கடுமையாகச் சாடியுள்ளது. இராமர் ஆலயம் கட்டுவதற்கு அத்வானியின் ஆதரவை நாம்நம்பியிருக்கவில்லை ,ஆலயம் கட்டுவதற்காக எந்தவொரு அரசும் தியாகம் செய்ய வேண்டிய தேவையில்லையென்று விஷ்வஹிந்துப் பரிசித்தின் மூத்த தலைவர் ஆச்சாரிய கிஷோத் கூறினார்.

விஷ்வஹிந்துப்பரிசித்திற்கு எந்தவொரு சட்டமும் தேவையில்லை மக்களின் ஆதரவு போதும் என்று அவர் கூறினார்.

அடுத்த மாதம் 13ஆம் திகதி புதுடில்லியில் வி.எச்.பி கூடி இது தொடர்பாக ஆராயுமெனவும் ஆச்சாரிய கிஷோத் கூறினார். (பி-2)

# அம்ரோஷி மேன்முறையீடு

(ஜகார்த்தா)

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ம் திகதி இந்தோனேஷியாவின் சொர்க்கபுரியான பாலித்தீவில் நடைபெற்ற குண்டு வெடிப்புக்கு காரணமானவரென குற்றஞ்சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட அம்ரோஷி தனது தீர்ப்புக்கு எதிராக மனுத்தாக்கல் செய்யவுள்ளார்.அத்துடன் இந்த மனுவில் கையொப்பமிட்டிருப்பதாக அவரது வழக்கறிஞர்கள் கூறியுள்ளனர்.

இதனையடுத்து இவரது மரணதண்டனை நிறைவேற்றும் காலம் பிற்போடப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (பி-2)



ஈராக்மீதான அமெரிக்க யுத்தத்தின் போது காயமடைந்து கைகளை இழந்த ஈராக்கிய சிறுவனுக்கு கால்களை இழந்த ஈராக்கிய சிறுவன் தொப்பி அணிவித்து மகிழ்கின்றான். இவ்விருவரும் சிகிச்சைக்காக லண்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

# உலகம் முழுவதும் யுத்தம் வியாபிப்பதற்கு ஆயுதங்களை விற்கும் நாடுகளே பொறுப்பு

## மலேஷியப் பிரதமர் சாடுகிறார்

(கோலாலம்பூர்)

உலகம் முழுவதும் யுத்தம் பரவுவதற்குகான பொறுப்பினை ஆயுதங்களை விற்பனை செய்யும் செல்வந்த நாடுகள் ஏற்க வேண்டும் என்று மலேஷியப் பிரதமர் மவிந்தீர் முகமட் தெரிவித்துள்ளார்.

நவீனரக ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படுவதாலேயே உலகம் முழுவதும் யுத்தம் வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாக மலேஷியத் தலைநகர் கோலாலம்பூரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சமாதான மாநாட்டில் பேசும் போதே அவர் கூறினார்.

உரிய காரணங்கள் இல்லாமலேயே பல யுத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பிரதமர் குற்றச்சாட்டைப் முன்வைத்துள்ளார்.

அத்துடன் ஆயுதங்களை வீணாகப் பயன்படுத்துவதனால் விலைமதிக்கமுடியாத உயிர்கள் அநியாமாகப் பலியாகுவதாகவும் அவர் தெரிவித்தார்.

யுத்தத்தில் ஈடுபடும் வறிய நாடுகளை ஆயுதக்கொள்வனவில் ஈடுபடுமாறு செல்வந்த நாடுகள் அழுத்தம் கொடுப்பதாகவும் அந்நாடுகளை அவர் குறைகூறினார்.

77 வயதான மலேஷியப் பிரதமர் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் தனது பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பி-2)

# சதாம் ஆட்சியில் பணிபுரிந்த உள்விவகார அமைச்சர் சரண்

(பத்தாத்)

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் ஆட்சியின் போது உள்விவகார அமைச்சராக பணியாற்றி வந்த மஹ்முதிஅல் அஹ்மட் அமெரிக்கப் படையினரிடம் சரணடைந்துள்ளார்.

இவர் சதாம் ஹுசைனைத் தேடியழிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்கப் படையினரிடமே சரணடைந்துள்ளார்.

அமெரிக்காவினால் தேடப்பட்டுவரும் 55பேர் கொண்ட பட்டியலில் 29வது நபராக விளங்கிய மஹ்முதிஅல் அஹ்மட் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும் அது தவறான தகவல் என்றும் இவர் தற்போதுதான் சரணடைந்துள்ளார் என்றும் அமெரிக்க இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை அமெரிக்காவினால் தேடப்பட்டுவரும் 55பேர் கொண்ட பட்டியலில் சிலர் கைதாகியும்,சிலர் சரணடைந்துள்ளதுடன் ஏனையவர்களில் சிலர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (பி-2)

# பாகிஸ்தானுக்கான இந்தியதூதுவர் நியமனக் கடிதத்தை முஷாரப்பிடம் கையளித்தார்

(புதுடில்லி)

பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதுவர் சிவசங்கர் மேனன் தனது நியமனக் கடிதத்தை பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பிடம் கையளித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையே மீண்டும் பேச்சுவார்த்தையை ஏற்படுத்தி நல்லுறவை வளர்க்கும் நடவடிக்கைகளில் ஒன்றாகவே இது அமைகின்றது.

இந்தியத் தூதுவரின் நியமனக் கடிதம் நேற்று முன்தினம் கிடைக்கப் பெற்று விட்டதாக பாகிஸ்தான் வெளியுறவு அமைசசின் பேச்சாளர் மசூர்கான் தெரிவித்துள்ளார்.

எனினும் பாகிஸ்தான் ஜனாதிபதிக்கும் இந்தியத்தூதுவருக்கும் இடையே இடம் பெற்ற பேச்சுவார்த்தை குறித்து அவர் எந்த விடயத்தையும் தெரிவிக்கவில்லை. (பி-2)

# பிறேஸிலில் சுரங்கப்பாதையூடாக 87 சிறைக்கைதிகள் தப்பியோட்டம்

(பிறேஸிலியா)

பிறேஸிலின் சிறைச்சாலையொன்றிலிருந்து 87 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

இக்கைதிகள் சிறைச்சாலையிலிருந்து 50 யார் நீளமான சுரங்கப் பாதையொன்றை அருகிருந்த காட்டுப்பகுதிவரை அமைத்தே தப்பிச்சென்றுள்ளனர்.

இரண்டு கட்டடங்கள் மற்றும் கண்காணிப்பு கோபுரம் அடங்கிய சிறைச்சாலைச் சுவரையும் தாண்டிச்செல்லும் வகையில் இச்சுரங்கப் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

எனினும் இவ்வாறு தப்பிச் சென்றவர்களில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனையோரைத் தேடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (பி-2)

# இந்திய-பாகிஸ்தான் சுதந்திரதினம் கூட்டுவிழாவாக கொண்டாட ஏற்பாடு

(வாஷிங்டன்)

இந்திய-பாகிஸ்தான் சுதந்திர தினத்தைக் கூட்டு விழாவாக அமெரிககாவில் கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 14 முதல் 16ஆம் திகதி வரை கொண்டாடப்படவுள்ள இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை தெற்காசிய மருத்துவர்கள் செயலாக்கக் குழு செய்துவருகிறது.

கலிபோர்னியா, பொஸ்டன், அட்லாண்டா உள்ளிட்ட இடங்களில் இக் கூட்டு விழா நடைபெறும். அமெரிக்காவிலுள்ள முன்னணி இந்திய பாகிஸ்தான் மருத்துவர்களால் தெற்காசிய மருத்துவர்கள் செயலாக்க குழு கடந்த மாதம் அமைக்கப்பட்டது.

அமெரிக்காவில் வாழும் இந்திய - பாகிஸ்தான் சமூகத்தவர்களிடையே பரஸ்பர நம்பிக்கை, ஒத்துழைப்பு ஆகியவற்றை ஏற்படுத்துவதே இந்த அமைப்பின் முக்கிய நோக்கமாகும். (பி-2)

# கனடாவில் காட்டுத்தீ தணிந்துள்ளது

(ஒட்டாவா)

கனடாவின் வன்கூவர் பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீயினால் இடம் பெயர்ந்த மூவாயிரத்து 500 பேர் தமது சொந்த இடங்களுக்கு திரும்பத் தொடங்கியுள்ளனர்.

''பிரிட்டிஷ் கொலம்பியா'' மலைச்சாரல் பகுதியிலிருந்து சுமார் ஒரு வாரத்திற்கு முன்னர் இடம் பெயர்ந்த மக்களே இவ்வாறு மீண்டும் சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

காட்டுத் தீ பரவியிருந்த வன்கூவர் நகரின் வடகிழக்குப் பகுதியில் மக்கள் மீண்டும் குடியேறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டின் அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக் காட்டுத் தீ 70 சதுரமைல்களுக்குப் பரவியிருந்ததுடன் 60 இற்கு மேற்பட்ட வீடுகள் முற்றாகச் சேதமடைந்திருந்தமை தெரிந்ததே. (பி-2)

# பாக். சிந்து மாகாணத்தில் பெருவெள்ளம்; 110பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் சிந்து மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இதுவரை 110பேர் உயிரிழந்துள்ளதோடு 6 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வெள்ளத்தினால் பாதிக்கபட்டுள்ளார்கள்.

கடந்த சில தினங்களாக பெய்து வருகின்ற மழையின் காரணமாக சிந்துமாகாணத்தில் பல கிராமங்கள் வெள்ளத்தினால் சூழ்ந்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குவதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது. ஆயினும் பாதிக்கப்பட்டோருக்கு சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருவதாக பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

மேலும் பாதிக்கப்பட்டோர் தங்குவதற்கான தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

# மியான்மாரில் ஜனநாயக மறுசீரமைப்புக்கு சில நாட்கள் செல்லும்

(ரங்கூன்)

மியன்மாரின் ஜனநாயக மறுசீரமைப்புத் திட்டங்கள் தொடர்பாக ஆராய மேலும் சில காலம் செல்லுமென அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

ஜனநாயகவாதி ஆங்ஷாங் சூகியை விடுதலை செய்வது தொடர்பாக தாய்லாந்து முன்வைத்துள்ள இத்திட்டங்கள் குறித்து ஆராயும் அதேவேளை, உள் நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உள் நாட்டுத்திட்டமொன்று தேவையென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தாய்லாந்து முன்வைத்துள்ள திட்டங்களைத் தாம் நிராகரிக்கப் போவதில்லையெனவும் மியன்மாரின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்து முன்வைத்துள்ள திட்டங்களில் உள்ளடக்கபபட்டுள்ள விடயங்கள் குறித்து மியான்மார் அரசாங்கம் கருத்து வெளியிடவில்லை. (பி-2)

## இன்று ஒரு தகவல்

# "நான்"

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். ராஜா என்று இருந்தால் அவருக்கு அமைச்சர் இல்லாமலா? அவரும் இருந்தார். அந்த அமைச்சர் ஒரு நாள் ஒரு காட்டுக்குப் போனார். அங்கு ஓர் துறவி அமர்ந்திருந்தார். அவரைப் பார்த்தவுடன் இவர் ஓடிப் போய் காலில் விழுந்தார். அப்போது அந்தத் துறவி இவரை நூறாண்டு காலம் வாழ்க என்று வாழ்த்தி ஆசீர்வதித்தார். அதைக் கேட்டவுடன் அமைச்சருக்கு மிகுந்த திருப்தி. மனம் நிறைந்து விட்டது. அந்த நிறைவுடன் அரண்மனைக்கு வந்தார். நேராகச் சென்று ராஜாவைப் பார்த்தார் . எங்கு போய் விட்டு வருகின்றீர்கள்? என்றார் ராஜா. அவரும் காட்டுக்குப் போய்விட்டு வருகின்றேன். அது விடயமாகத்தான் உங்களிடம் கூறுவதற்கு அவசரமாக ஓடி வருகின்றேன் என்றார். என்ன விசயம்? என்று கேட்டார் ராஜா. ''காட்டில் ஒரு துறவி அமர்ந்திருந்தார். அவரைப் பார்த்தவுடன் காலில் விழ வேண்டும் போல் தோன்றியது. விழுந்தேன், உடனே அவர் என்னை மனதார வாழ்த்தி ஆசீர்வாதம் செய்தார். நூறாண்டு காலம் வாழ்க என்று வாழ்த்தினார். நீங்களும் அந்தச்சாமியாரிடம் போய் ஆசீர்வாதம் வாங்கினால் நல்லது'' என்றார். ராஜா யோசித்துப் பார்த்தார். போய் விட்டு வந்தால் நல்லது என்று முடிவு செய்தார்.

''இப்போது நமக்கு நிலைமை சரியில்லாமல் உள்ளது. பக்கத்து நாட்டு ராஜா எப்போது நம் மீது படையெடுக்கலாம் என்று காத்துக் கொண்டிருக்கின்றான். அதனால் சாமியாரிடம் ஆசீர்வாதம் வாங்கினால் அது நமக்கு ஒரு பாதுகாப்பாக இருக்கும்'' என்று முடிவு செய்தார்.

உடனே புறப்பட்டுச் சென்றார் காட்டுக்கு! தனியாகவா சென்றார். சகல பரிவாரங்களுடனும் மிகவும் ஆடம்பரமாக ஏகதடபுடலாக காட்டுக்குப் போய்ச் சேர்ந்தார். இவர் போய்ச் சேர்ந்த போது அந்தத் துறவி தியானத்திலிருந்தார். ''சுவாமி தியானத்தில் உள்ளார். சிறிது நேரம் காத்திருங்கள்'' என்றனர் அங்கிருந்த சீடர்கள். ''நான் யார் தெரியுமா? இந்த நாட்டு மன்னன் ராஜா வந்திருக்கிறார் என்று உங்கள் குருவிடம் கூறுங்கள'' என்று உத்தரவிட்டார் ராஜா. ''முனிவரின் தியானத்தைக் கலைகக முடியாது'' என்று கூறிவிட்டனர் சீடர்கள். சரி! வேறு வழியில்லை என்று ராஜா காத்திருந்தார்.

நீண்ட நேரத்தின் பின் முனிவர் கண் திறந்து பார்த்தார். ''நான் தான் இந்த நாட்டு ராஜா வந்திருக்கின்றேன். எனது அமைச்சர் இங்கு வந்திருந்ததாகவும் நீங்கள் அவரை வாழ்த்தியதாகவும் கேள்விப்பட்டேன். அது தான் வந்தேன் நீங்கள் என்னை வாழ்த்த வேண்டும் ஆசீர்வாதம் செய்ய வேண்டும''என்றார் ராஜா. முனிவர் நிமிர்ந்து பார்த்தார். அமைச்சரை வாழ்த்தியதை விட என்னைக் கொஞ்சம் அதிகமாகவே வாழ்த்த வேண்டும். ஏனென்றால் நான் ராஜா அல்லவா? என்றும் இவர் கேட்டுக் கொண்டார். அமைச்சரை நூறாண்டு காலம் வாழ வாழ்த்தினால் இவரை நூற்றிப்பத் தாண்டுகாலம் வாழ் என்றா வாழ்த்த முடியும்.

முனவர் இவற்றைப்பற்றி எதுவும் யோசிக்கவில்லை. நிமிர்ந்து பார்த்து ''நான் இறந்த பின் வா உன்னை வாழ்த்துகிறேன்'' என்றார். இறந்த பின் எப்படி வாழ்த்த முடியும்? ராஜாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பேசாது திரும்பி வந்து விட்டார். அமைச்சரை அழைத்து விசயத்தைக் கூறினார். முனிவர் அப்படிக்கூறியதற்கு என்ன அர்த்தம் என்று அமைச்சருக்கு விளங்கி விட்டது. ராஜாவுக்கு அதனை விபரமாக எடுத்துக் கூறினார். மன்னா முனிவர் ''நான் '' என்று கூறியது தன்னைப் பற்றி அல்ல . உங்களுக்குள் இருக்கும் நான் எனும் அகங்காரத்தைப் பற்றித் தான் இப்படிக் கூறியிருக்கின்றார். அந்த நான் எனும் செருக்கு உங்களிடமிருந்து ஒழிந்த பின் தன்னிடம் வருமாறு கூறியுள்ளார் என்று விளக்கினார். ராஜாவுக்கு அதன் பின்பு தான் விபரம் விளங்கியது.

தன்னிடமிருந்த அகங்காரத்தை சிறிது சிறிதாகக் குறைத்துக் கொள்ளத்தொடங்கினார். அவை முழுதும் அழிந்த பின் துறவியிடம் சென்றார். மனப்பூர்வமாக ஆசீர்வாதம் வாங்கிய பின் திரும்பி வந்தார். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் '' நான் ''எனும் அகங்காரம் நம்மிடம் இருந்து போனால் தான் பெரியோரின் ஆசீர்வாதம் கிடைக்கும்.

இந்தக் கதையை அரைகுறையாக விளங்கிக் கொண்ட ஒருவர் இருந்தார். அவரிடம் ஒருவர் கடன் கொடுத்திருந்தார். அதனை வசூல் செய்வதற்குப் போனார். அவர் இவரிடம் கூறினார். '' நான் செத்தபின் வா'' என்று முனிவர் கூறியது போல் கூறினார். இவர் திரும்பி வந்து தனது அகங்காரத்தை விட்டு மறுபடியும் சென்றார். அங்கு அவர் உண்மையிலேயே இறந்து விட்டார். இறப்பதற்கு முன்பு ஒரு கடிதம் எழுதி இவர் தேடி வந்தால் கொடு என்று கூறியிருந்தார். அவர் கடிதத்தை வாங்கிப்படித்தார். ''நான் எனும் அகங்காரம் இப்போது உன்னிடம் இருக்காது என எண்ணுகிறேன். அதன் பின் எனது எண்ணமும் இருக்காது போய்விடும். இந்தளவு மாறிய பின்பு அந்தப்பணம் எனதாக இருந்தால் என்ன? உனதாக இருந்தால் என்ன? எல்லாம் ஒன்று தான் போய்விட்டு வா'' என்று எழுதியிருந்தது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர் 116 பேரையும் நாடுகடத்த உத்தரவு

(கொழும்பு)

சட்ட விரோதமான முறையில் இத்தாலி செல்ல முயன்ற போது கைது செய்யப்பட்ட 116 வெளிநாட்டவர்களை உடனடியாக நாடு கடத்துமாறு உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தவிட்டுள்ளார்.

இது சம்பந்தமாக வெளிநாட்டுத் தூதரகங்களுடன் கலந்துரையாடுமாறும் உள்துறை அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கடந்த ஜூலை முதலாம் திகதி தொடக்கம் இதுவரை கைது செய்யப்பட்ட 674 சட்ட விரோத குடியேற்ற வாசிகளில் 116 பேர் தொடர்பான விசாரணைகள் முடிவடைந்த நிலையிலேயே உள்துறை அமைச்சர் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

இதேவேளை, மிடிகானத் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ள இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இவர்கள் தமது சொந்த நாடுகளுக்கு திரும்பிச்செல்லத் தேவையான விமானச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்ய முடியாமல் இருப்பதாகவும்,

இவர்களை இலங்கைக்கு அழைத்து வந்த நபர்கள் இவர்களிடம் இருந்த பணம் முழுவதையும் அபகரித்துச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (தி-10)

# போசனையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மதிய உணவு

(கொழும்பு)

போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

முதலாவதாக பச்சைக் கடலை மற்றும் போசனை உணவுப் பொருட்கள் அம்பாந்தோட்டை, அம்பாறை, வவுனியா மாவட்டங்களிலுள்ள 1250 பாடசாலைகளைச்சேர்ந்த முதலாம் தர மாணவர்களுக்கு வழங்கப்படும். இம்மாவட்டங்களில் கல்வி அமைச்சும்,சுகாதார அமைச்சும் இணைந்து மேற்கொண்ட புள்ளி விபரங்களின் படி பெறப்பட்ட தகவல்கள் அதிர்ச்சியூட்டுபவையாக இருந்தன. அதன் படி வவுனியாவில் 37 வீதமும், அம்பாறையில் 34 வீதமும் பாடசாலை மாணவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப் பட்டிருந்தது தெரிய வந்தது. அடுத்த வருடம் முதல் நாடு முழுவதிலும் உள்ள 1-5 தர மாணவர்களுக்கு வருடத்திற்கு 50 மில்லியன் ரூபா பெறுமதியான உணவுகள் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் போசாக்கின்மை மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் உலக உணவுத் திட்டத்துடன் இணைந்து விசேட திட்டம ஒனறு நடைமுறைப்படுத்தப்படும். இங்குள்ள 142 பாடாலையைச் சேர்ந்த 27 ஆயிரம் மாணவர்களுக்கு வருடத்திற்கு 74 மில்லியன் ரூபா பெறுமதியான போசனை உணவு வழங்கப்படவுள்ளது. (இ)

## ஜனவரியிலிருந்து 24 மணிநேர மின்சாரம்

(வேலணை)

வேலணை,ஊர்காவற்றுறை ஆகிய பிரதேசங்களிற்கு அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் 24 மணித்தியாலமும் மின்சாரம் வழங்கத் தீமானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காரைநகர் ஊடாக மேற்படி பகுதிகளுக்கு மின் இணைப்புக்கள் கிடைக்கவுள்ளன. முன்னரும் இதேவழியாகவே மேற்படி பகுதிகளுக்கு மின்சாரம் கிடைத்து வந்தது. தற்போது வேலணை மற்றும் ஊர்காவற்றுறை பகுதிகளுக்கு குறிக்கப்பட்ட சில மணி நேரங்களுக்கே மட்டுப்படுத்தப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

அத்துடன் ,சனி, ஞாயிறு தினங்களிலும் ஏனைய விடுமுறை தினங்களிலும் பகல் நேர மின்சாரம் இது வரை காலமும் விநியோகிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (பி-47)

## இராசி பலன்

**11.08. 2003**
**(ஆடி 26, திங்கள்)**

சதுர்த்தசி - ந.ப.11.52 வரை
உத்தராடம்- மு.ப. 08.28 வரை
இர்ாகுகாலம் - 07.34- 09.04
சுபநேரம் - 12.04-01.34

பூரணை விரதம்

**மேடம்**
அதிக பிரயாசை, காரிய அனுகூலம், பிறர் உதவி, சுபநிகழ்வு.

**இடபம்**
உடல் உழைப்பு, புதிய திட்டமிடல், மனச்சஞ்சலம், காரியதாமதம்.

**மிதுனம்**
எதிர்பாராத அச்சம், முயற்சி தாமதம், கௌரவக்குறைவு, உடல் நலக்குறைவு,

**கடகம்**
அபூர்வ சந்திப்பு, சென்ற இடத்தில் செல்வாக்கு, புத்திசாதுரியம், கலந்துரையாடல்.

**சிங்கம்**
சத்துருஜெயம், தேகஆரோக்கியம், திடீர் பயணம், காரிய சித்தி.

**கன்னி**
காரிய இடையூறு, தொழிலில் புதிய திருப்பம், குடும்பக்கவலை, திடீர் நன்மை.

**துலாம்**
ரோக பயம், புதிய விடயம், மாதா சுகம், முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
இனிய அனுபவம், பொருள் சேர்க்கை, எடுத்த கருமங்கள் கைகூடும், அன்னியர் உதவி.

**தனுசு**
மாதர் நட்பு, எதிர்பாராத விவாதம், எடுத்த காரியம் தாமதமாகும், பிறருக்கு உதவுதல்.

**மகரம்**
நண்பர்கள் உதவி, ஜனவசியம், புதிய முயற்சி, முயற்சி பலிதம்.

**கும்பம்**
அமைதிக்குறைவு, பிரயாண அலைச்சல், பெரியோரால் மதிக்கப்படுதல், சுப செலவு.

**மீனம்**
தொழில் சிந்தை, காரிய சித்தி, மன மகிழ்ச்சி, தெய்வ தரிசனம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட சவால்

## தினமுரசு எரிக்கப்பட்டது தொடர்பாக ஈ.பி.டி.பி.

(கொழும்பு)

தினமுரசு பத்திரிகையின் பிரதிகள் தீக்கிரையாக்கப்பட்டது குறித்து ஈழ மக்கள் ஜனநாயக்கட்சி (ஈ.பி.டி.பி) கண்டனம தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் பிரதம மந்திரியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாசகர்களின் பெரும் மதிப்பைப் பெற்றதும், சூடு-சுவை-சுவாரசியம் மிக்க செய்திகளைத் திரட்டி வாசக நெஞ்சங்களுக்கு வழங்கி வருவதுமான தினமுரசு வார இதழின் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதல் ஊடகத்துறைச் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகும். தினமுரசு இதழின் விற்பனை முகவர் கடந்தப் பட்டது,விற்பனையாளர்கள் அச்சுறுத்தப்பட்டது என்பன போன்ற சம்பவங்கள் இதற்கு முன்னரும் பல்வேறு தடவைகளில் இடம்பெற்றுள்ளன.

தினமுரசு இதழின் நிர்வாகிகள் இவை தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு கடிதங்களை எழுதியுள்ளனர். ஆனால் இவற்றைத் தவிர்க்கும் வகையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் செயற்படவில்லை. இப்போது பத்திரிகையின் பிரதிகள் பறித்தெடுக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இது மக்களின் கருத்து சுதந்திரம் மற்றும் ஊடகத்துறைச் சுதந்திரம் என்பவற்றுக்கு விடுக்கப்பட்டுள்ள மாபெரும சவாலாகும் என்று அவ்வறிக்கை கூறுகின்றது.

தினமுரசு இதழின் மீது இப்போது நடத்தப்பட்ட இக்கோழைத்தனமான தாக்குதல்களுக்கு எதிராக ஊடகத்துறை சுதந்திரத்தை வலியுறுத்துபவர்களும், ஜனநாயக முற்போக்கு சக்திகளும் துணிவுடன் குரல் கொடுக்க முன் வரவேண்டும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி)

# சகோதரத்துவத்தை ஏற்படுத்துவது சனசமூக நிலையங்களின் கடமை

## வலி.கிழக்கு விசேட ஆணையாளர்

(கோப்பாய்)

சகோதரத்துவத்தையும் சமாதானத்தையும் கிராம மக்களிடையே ஏற்படுத்துவதும் கிராம மக்களை விழித்தெழச் செய்வதும் சமகாலச் சூழ்நிலையில் சனசமூக நிலையங்களின் தலையாய கடமைகளில் ஒன்றாகும்.

எனவே, இச் செயற்பாட்டில் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாகச் செயற்பட வேண்டியது எமது பொறுப்பு. அதன் மூலமே நிலையங்களால் நடாத்தப்படும் முன்பள்ளிச் சிறார்களின் நலன்களைச் சரிவரப் பேண முடியும் என வலி.கிழக்கு பிரதேச சபை விசேட ஆணையாளர் க. வெங்கடாசலம் உரும்பிராய்கிழக்கு சென் மைக்கல் சனசமூக நிலைய முன்பள்ளி சிறுவர்களின் விளையாட்டு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

நிலையத் தலைவர் நா. இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மக்களின் தேவைகளை நிறைவு செய்வதில் உள்ளூராட்சி அமைப்புகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

அவற்றுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதிலும் சனசமூக நிலையங்கள்,கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன.

எனவே, பிரதேசத்தின் அபிவிருத்திக்கு இது போன்ற அமைப்புகளின் பங்களிப்பு உறுதுணையாக அமையும். வேற்றுமைகள் தனிப்பட்ட குரோதங்களை தள்ளி வைத்துப் பணியாற்றுவது காலத்தின் தேவையாகும என்றார். (உ-79)

*உறுப்சியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேரா தியல்வது நாடு*
*-குறள்*

வலம்புரி

## அமைச்சர்களின் வருகை !

சமாதான உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் யாழ்ப்பாணம் தென்னிலங்கை மக்களின் சுற்றுலாப் பிரதேசமாக மாறியுள்ளது.

யுத்தச் சூழ்நிலையில் தென்னிலங்கையில் முடங்கிக் கிடந்த சிங்கள மக்கள் இப்போது யாழ்ப்பாணத்திற்கு படையெடுத்த வண்ணம் உள்ளனர். யுத்தத்தால் அழிவுற்ற யாழ்ப்பாணப் பிரதேசம் காட்சிப் பொருளாக மாறிவிட்டது. அப்பிரதேச மக்களின் குடிசை வதிவிடங்கள் ஏளனப் பார்வைக்கு ஏதுவாகியுள்ளது. மெலிந்து நலிந்து போன மக்களின் தோற்றம் விசித்திரப் பார்வைக்கு தீனி போடுகிறது.

இக்காட்சிகளைக் காண வருகின்ற சிங்கள மக்கள் ஏதோ ஒரு வகையில் திருப்தியடைகின்றனர். அந்தத் திருப்தி எமது சிங்கள ஆட்சியாளர்கள் யாழ்ப்பாணத்து கல்விச் சமூகத்தை இப்படி ஒரு நிலைக்குக் கொண்டு வந்து வெற்றி கண்டுவிட்டார்கள் என்பதாகக் கூறலாம்.

எதுவாயினும் அவர்களின் வருகையை யாழ்ப்பாண மக்கள் வரவேற்கிறார்கள். ஆனால் அந்த வரவேற்பை அகதி முகாம்களிலும் ஓலைக் கொட்டில்களிலும் குடியிருந்து கொண்டு செய்ய விரும்பவில்லை என்ற உண்மையை சுற்றுலா வரும் தென்னிலங்கை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேவேளை யாழ்ப்பாணத்தைச் சுற்றிப்பார்க்க வருகின்ற தென்னிலங்கை மக்கள் செழிப்பு மிக்க யாழ்ப்பாணத்தில் அரச படைகள் நடத்திய யுத்த வெறியாட்டத்தின் விளைவாகவே யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் இத்தகையதொரு நிர்க்கதிக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்ற உண்மையை உணர்ந்து கொள்வதும் அவசியமாகும்.

இத்தகைய உணர்வு நிலை இனவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவும் இலங்கை வாழ் மக்கள் எதிர் காலத்தில் யுத்த பயமின்றி வாழ்வதற்கும் உதவுவதாக இருக்கும்.

அதேவேளை யாழ்ப்பாணத்திற்கு அடிக்கடி விஜயம் செய்கின்ற ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சர்கள் யாழ்ப்பாண விஜயத்தில் சுய திருப்தி காணமுற்படாமல் யாழ்ப்பாணத்து மக்கள் படும் அவலங்களை நீக்க காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வெறுமனே அமைச்சர்கள் வருவதும் அவர்களுக்கு ஆலத்தி எடுப்பதும் கச்சேரியில் கூட்டம் வைப்பதுமே நிகழ்ச்சி நிரலாக இருந்தால் அதனால் குறித்த சிலர் நன்மையடையலாம். ஆனால் அப்பாவித் தமிழ் மக்களுக்கு சொந்த மண்ணை, வாழ்விடத்தை விட்டு அகதிவாழ்வு வாழும் மக்களுக்கு எவ்வகையிலும் அது உதவப் போவதில்லை என்ற உண்மை உணரப்பட வேண்டியதொன்றாகும்.

# ஆலயங்கள் சேதமாக்கப்பட்டதன் மூலம் வழிபடும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது

## உள்துறை அமைச்சரிடம் யாழ்.ஆயர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

கடந்த இரு தசாப்தங்களாக யாழ்.மண்ணில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக யாழ்.நகர் மற்றும் கரையோரப் பிரதேசங்களில் 300க்கும் மேற்பட்ட கத்தோலிக்க ஆலயங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. இதனால் கத்தோலிக்கர்களின் வழிபடும் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. சேதமாக்கப்பட்ட ஆலயங்கள் யாவும் மறுசீரமைக்கப்பட வேண்டும். எனவே இதற்கான நிதியுதவியை அமைச்சர் எமக்கு வழங்கி உதவ வேண்டும் இவ்வாறு யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் யாகப்பர் ஆலயத்தில் அமைச்சர் ஜோன் அமரதுங்கா கலந்து கொண்ட நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

உயர் பாதுகாப்பு வலயம் என்ற பிரச்சினை காரணமாக பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் இடம் பெயர்ந்த சுமார் 2 ஆயிரம் கிறிஸ்தவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் அகதிகள் முகாம்களில் வருடக் கணக்காகத் தங்கி அவல வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றன. இக் குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு மீண்டும் திரும்பிச் செல்ல வேண்டும்.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அப்புறப்படுத்தப்பட்ட மீனவக் குடும்பங்கள் தமது மீன்பிடித் தொழிலை மீண்டும் செய்ய வேண்டும். அதற்கான ஏற்பாட்டினை அமைச்சர் விரைந்து செய்ய வேண்டும். நீண்ட காலமாக துன்பப்பட்டு வாழுகின்ற கரையோர மீனவக் குடும்பங்களின் வாழ்வில் மீண்டும் வசந்தத்தை ஏற்படுத்தி நம்பிக்கையைக் கட்டியெழுப்பி வாழச் செய்ய வேண்டும் என்றார்.

இக் கூட்டத்தில் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா யாழ்.ஆயரிடம் கிறிஸ்தவ மத மேம்பாட்டு நிதிக்கென காசோலை ஒன்றினையும் வழங்கினார். (த-16)

## பரலோகஅன்னை பெருவிழா

(சில்லாலை)

2004ல் வரவிருக்கும் நூற்றாண்டு யூபிலிப் பெருவிழாவிற்கான ஆயத்த விழாவாக புனித பரலோக அன்னை பெருவிழா நீர்வேலி புனித பரலோக அன்னைஆலயத்தில் நடைபெற்று வருகிறது. (ந-58.3)

## மட்டக்களப்பு சிறையிலுள்ள இந்திய பிரஜைகள் மீரிகம முகாமுக்கு மாற்றப்படுவர்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்திற்குட்பட்ட கல்முனைப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டு தற்போது மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 14 இந்தியப் பிரஜைகளும் மீரிகம தடுப்ப முகாமுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் குணசேகரம் தெரிவித்துள்ளார்.

விசா காலாவதியான நிலையில் தங்கியிருந்த போது, கைதுசெய்யப்பட்ட இவர்களை கடந்த வெள்ளிக்கிழமை கல்முனை நீதிவான் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதிக்குள் இந்தியாவுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பி-08)

## தேர்தல் முறையை மாற்றி அமைக்கும் பிரேரணை

(கொழும்பு)

தேர்தல் முறையை மாற்றி அமைப்பதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் பிரேரணையினை இன்னும் மூன்று வாரங்களுக்குள் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப் போவதாக ஐக்கியதேசிய முன்னணியின் அமைப்பாளரும் தொழில் அமைச்சருமான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் படி தேர்தல் முறையை மாற்றி அமைக்கும் பாராளுமன்ற தெரி வுக்குழுவிற்கு ஆளும் கட்சியிலிருந்து 10 உறுப்பினர்களும் எதிர்க் கட்சியிலிருந்து 9 உறுப்பினர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

முதலில் இவர்களின் பெயர்கள் பாராளுமன்றிற்கு அறிவிக்கப்பட்டு, அங்கு அனுமதி கிடைத்ததன் பின்னரே, தேர்தல் முறையை மாற்றி அமைக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் சேர்க்கப்படவுள்ளனர். (10)

## வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாக அதிகாரிகள் சென்னைக்குச் சுற்றுலா

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 15நிர்வாக அதிகாரிகள், நிர்வாகக் கல்விச் சுற்றுலாவொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 21ஆம் திகதி சென்னை செல்ல உள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை வடக்கு-கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு சமூகநலன் மகளிர் விவகார அமைச்சு மேற்கொண்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா தலைமையில் சுற்றுப் பயணம் செல்லும் இவர்கள், சென்னையில் தமிழ் இணையத்தில் தமிழ்மொழி மூலமான 6வது சர்வதேச மாநாட்டிலும் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

## மின்பிறப்பாக்கி அடிக்கடி பழுது

(வேலணை)

வேலணைப் பகுதிக்கு மின்சாரம் வழங்கும் மின்பிறப்பாக்கி அடிக்கடி பழுதடைந்து விடுகின்றது. இதனால் அப்பகுதி மின்பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதுடன் அரச அலுவலகங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. மேலதிகமாக மற்றுமொரு மின்பிறப்பாக்கி பொருத்தித்தரவேண்டுமென அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (பி-47)

## நல்லையில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லைக்கந்தன் உற்சவத்தை ஒட்டி, யாழ்.மாவட்ட வடபிரதேச இந்துப்பேரவை ஏற்பாட்டில் ஆலயத் தேரடியில் அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இடம்பெற்றுவரும் தெய்வீக நிகழ்ச்சித் தொடரில் இன்றுமாலை 6மணிக்கு ''முருகனின் மகிமை'' என்னும் பொருளில் திருமதி சண்முகதாஸ் சொற்பொழிவாற்ற உள்ளார்.

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றுவரும் தெய்வீக இசையரங்கில் 9ஆம் திருவிழாவான இன்று எஸ்.நாகராசாவின் பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள்ளது. (18)

## ஓமந்தை சேமமடுப் பகுதியில் 300குடும்பங்கள் மீளக்குடியேறின

(கிளிநொச்சி)

அதிஉயர் பாதுகாப்பு வலயமான ஓமந்தைப் பிரதேசத்தின் சேமமடுப் பகுதியைச்சேர்ந்த 300 குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்குரிய சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்து வருவதாக வவுனியா மாவட்ட அரச அதிபர் கணேஷ் தெரிவித்துள்ளார்.

நிக்கொட், நியாப் ஆகிய பாரிய அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் இப்பிரதேசத்தின் அடிப்படைத் தேவைகள் மற்றும் வீடுகளை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் என்பன மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பி-8)

## செவ்வாய் முதல் பல்கலைக்கழக ஊழியர் தொடர் வேலைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகப் போதனை சார ஊழியர்கள் நாளை செவ்வாய்க்கிழமை 12ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கவிருக்கும் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தில் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் கலந்து கொள்ள விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நீர்வழங்கல் மற்றும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடும் ஊழியர்களைத் தவிர ஏனைய சங்க ஊழியர்களை அன்றையதினம் காலை 9மணிக்கு ராமநாதன் மண்டபத்தில் கூடுமாறு சங்க நிர்வாகம் அறிவித்துள்ளது.

சேவை மூப்புக்கேற்ப தர உயர்வு, சம்பள நிர்ணயக் குழு நியமனம், அமைய ஊழியர்களை நிரந்தரமாக்குதல், இடர்கடனுக்கு நிதி வழங்குதல், ஓய்வூதிய திட்டத்தின் சலுகைகளை மீளாய்வு செய்தல், இடமாற்ற சபைகளை உருவாக்குதல், ''கல்விசாரா'' பதத்தினை மாற்றுதல், உள்ளக பதவி உயர்வு வாய்ப்பினை அதிகரித்தல் போன்ற 15கோரிக்கைகளை முன்வைத்து இந்த வேலைநிறுத்தம் நடைபெறவிருக்கின்றது. (பி)

## மாகாண சபையை கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை

### அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபையை கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமில்லையென உள்நாட்டு அலுவல்கள், உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அலிக் அலுவிகார தெரிவித்துள்ளார்.

மாகாண சபையின் ஆளுநரும் முதலமைச்சரும் இணக்கப்பாட்டுக்கு வந்தால் மட்டுமே மாகாண சபையை கலைக்க முடியும். எனினும் மத்திய மாகாண சபை தொடர்பாக ஜனாதிபதி எடுத்துள்ள தீர்மானம் பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் தலைமையில் நிர்வகிக்கப்படும் மாகாணசபைகளைக் கலைப்பதற்கு கட்சியின் தலைவி என்ற முறையில் மாகாணசபை ஆளுநருடனும் முதலமைச்சருடன் கலந்துரையாடி முடிவெடுக்கலாம் எனவும் அமைச்சர் அலிக் அலுவிவகார தெரிவித்துள்ளார். (த-5)

## தினசரி தியானம்

### ஒன்றுமட்டும் நிச்சயம்

எல்லோரும் அழியக்கூடியவர்களே. இளமை நிலையற்றது. பிறப்பு இறப்பு என்னும் சுழலில் ஆகப்பட்டுப் பல பிணிகளால் துன்பப் படுகிறீர்கள். சாதனை ஒன்றே உங்கள் தன்மையை தெய்வீகமாக மாற்றி, வீடுபேறு அடைய உதவும். செல்வம் உங்களுக்கு நிலையான பேரின்பத்தைத் தரமுடியாது. கடைசியாக ஒன்று மட்டும் நிச்சயம். ஆதமாவை உணர்தலே உங்களைப் பிறப்பிலிருந்தும் இறப்பிலிருந்தும் விடுவிக்கும்

சுவாமி சிவானந்தர்

# சமாதானத்தை ஏற்படுத்துவதில் அரசு தன்னை அர்ப்பணித்துள்ளது

## உள்துறை அமைச்சர் யாழ்ப்பாணத்தில் உரை

(யாழ்ப்பாணம்)

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக வடக்குக் கிழக்கில் இடம் பெற்ற யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை ஏற்படுத்துவதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான அரசாங்கம் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளது. இவ்வாறு உள்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று யாழப்பாணம் வந்திருந்த அமைச்சர் ஜோன் அமரதுங்க குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சி ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.கத்தோலிக்க மறைமாவட்டக் குரு முதல்வர் வண பிதா ஜேக்கப் நிக்கலஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இவ் வரவேற்பு வைபத்தில் அமைச்சர் ஜோன் அமரதுங்கா மேலும் பேசுகையில்;

யாழ்ப்பாணக் குடா நாட்டில் இடம் பெற்ற யுத்த அனர்த்தங்களின் போது கிறிஸ்தவ ஆலயங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அசம்பாவிதங்களைப் போல் இனிமேல் ஏற்பட அரசு ஒரு போதும் இடமளிக்க மாட்டாது. வடக்குக் கிழக்கில் மட்டும் அல்ல முழு நாட்டிலும் சமாதானத்தை ஏற்படுத்துவதில் அரசு தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயல்படுகின்றது. இந் நிலையில் வடக்குக் கிழக்கில் காணப்படும் பிரச்சினைகள் யாவும் வெகு விரைவில் தீர்த்து வைக்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

கிறிஸ்தவ விவகார அமைச்சர் என்ற முறையில் எனது அமைச்சின் மூலமாக கிறிஸ்தவ சமூகத்தின் வளர்ச்சிக்கு என்னாலான உதவிகளைச் செய்வதுடன் நிதியுதவியும் அளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். அதேவேளை, யாழ்.ஆயர் தெரிவித்த உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமான விடயத்தை பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வருவேன் என்றும் அவர் உறுதியளித்தார்.

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ்.ஆயர் மேதகு தோமஸ சௌந்தரநாயகம் ஆண்டகை பிரதமரின் ஆலோசகர்களான, ஜோன்.எல், தினேஷ்வீரக்கொடி, பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராசா சிறைச்சாலை ஆணையாளர் ருமிர் மசூர், யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

(ம-16,4,77)

## காணி அமைச்சர் இன்று யாழ் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடாத்தப் படவிருக்கும் வடக்கு கிழக்கு சமாதான விளையாட்டு விழா மற்றும் தேசிய விளையாட்டு விழா தொடர்பான ஏற்பாடுகள் பற்றி அதிகாரிகளுடன் கலந்துரையாடும் பொருட்டே இவரது விஜயம் அமைகிறது. (த)

## காங்கேசன் கடலில் மீன்பிடித்த இந்திய மீனவர்கள் பிடிபட்டனர்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைப் பகுதியை அண்டிய கடற்பரப்பில் இரண்டு மீன்பிடிப் படகுகளில் கடற்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள் நேற்றுக் காலை பிடிக்கப்பட்டு இளவாலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களின் இரண்டு படகுகளினதும் படகோட்டிகள் தவிர ஏனைய மீனவர்களும் படகும் விடுவிக்கப்பட்டது.

படகோட்டிகள் இருவரும் நேற்று மாலை மல்லாகம் நீதிமன்றில் இளவாலை பொலிஸாரால் ஆஜர் படுத்தப்பட்டனர். அவர்கள் இருவரையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி இளங்கோவன் உத்தரவிட்டார்.

இதேவேளை, நேற்று முன்தினம் சுழிபுரம் பகுதியில் சுழிபுரம் பகுதி மீனவர்களால் பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களில் படகோட்டி தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டுடன், படகோட்டி நேற்று மாலை மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த)

## அமைச்சர் நூர்தீன் மீண்டும் காங்கிரஸில் இணைந்தார்

(நமது நிருபர்)

வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் மீண்டும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் சேர்ந்து கொண்டார்.

மதவாச்சி மீரா மொகைதீன் பள்ளிவாசலில் நடைபெற்ற வைபவமொன்றிலேயே அமைச்சர் நூர்தீன் மசூர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் முன்னிலையில் காங்கிரஸில் இணைந்து கொண்டார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதிருப்திக் குழுவினருடன் இணைந்து கடந்த வருடம் அமைச்சர் நூர்தீன் மசூரும் வெளியேறியிருந்தார்.

அதாவுல்லா தலைமையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து வெளியேறிய ஏனைய முஸ்லிம் எம்.பிக்களையும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைத்துக் கொள்வது குறித்து அதிருப்தியாளர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடப்பதை முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

# யாழ். மாவட்ட நீதிபதியிடம் நீதிச்சேவை விளக்கம் கேட்கிறது

(கொழும்பு)

யாழ்.மாவட்ட நீதிபதியும் மஜிஸ்ரேட்டுமான ஆர்.ரி.விக்னராஜாவை நீதிச சேவை ஆணைக்குழு அவரது கூற்றுத் தொடர்பாக விளக்கம் தருமாறு கோரியுள்ளதாக கொழும்பில் இருந்து வெளியாகும் சன்டே ரைம்ஸ் தனது நேற்றைய வெளியீட்டில் செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

தமிழ் பேசும் மக்களுக்கு சுய உரிமையைப் பெற்றுத் தரக்கூடிய ஒரே நபர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தான என்று நீதிபதி விக்னராஜா தெரிவித்திருந்ததாக யாழ்ப்பாணத் தமிழ் பத்திரிகையிலும் பின்னர் கொழும்பில் இருந்து வெளியாகும். ஆங்கிலப்பத்திரிகையிலும் வெளியிடப்பட்டிருந்தது.

சமஷ்டி தொடர்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் வைத்து அவர் இதனைத் வெளிப்படுத்தியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் ஆங்கிலப் பத்திரிகை தனது முக்கியமான இரண்டு விடயங்களை திரிபுபடுத்தி வெளியிட்டிருக்கின்றது என நீதிபதி விக்னராஜா அப் பத்திரிகைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில் தென்னிலங்கையில் இரு பிரதான கட்சிகளையும் ஒன்று சேர்த்து சமஷ்டி அமைப்பின் கீழ் தமிழ்ப் பேசும் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை டெற்றுக் கொடுக்கக் கூடிய ஒரே நபர் பிரபாகரன் என்றே தாம் கூறியதாகவும், ஆனால் சமஷ்டி அமைப்பின் கீழ் சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக் கொடுக்கப் கூடிய துணிவு பிரபாகரனுக்கு உண்டு என்று தான் கூறியதாக அப் பத்திரிகை வெளியிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வருடம் மார்ச் மாதம் 11-ம் திகதி கிளிநொச்சியில் இடம்பெற்ற தமிழீழ நீதிமன்ற திறப்பு விழாவின் போது உரையாற்றிய புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், நீலன் திருச்செல்வம் தயாரித்த அரசியல் சட்ட வரைபு நாட்டிற்கு பொருத்தமானதாகவும் சகல இனத்தவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. ஆனால் அதனை ஜனாதிபதி விலக்கி விட்டார் எனத் தெரிவித்ததாகவும் அக் கருத்தரங்கில் நீதிபதி கூறியிருந்தார் எனவும், ஆனால், நீதிபதிகள் பொதுக் கருத்தரங்குகளில் வைத்து இவ்வாறான கருத்துக்களை தெரிவிப்பது நல்லதல்ல எனக கருதப்படுவதினாலேயே அவரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதாகவும் நீதிச் சேவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக அப் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ந)

## தமிழ் மொழியை அமுல்படுத்துமாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் உத்தரவு

(கொழும்பு)

கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் சமய விவகார அமைச்சின் செயற்பாடுகளில் தமிழ் மொழியை அமுல்படுத்துமாறு அமைச்சர் ரவூப் ஹக்கீம் அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மக்கள் தமது அவசர தேவைகளுக்காக தமிழ்மொழிமூலம் தொடர்பு கொள்வதாகவும், இதனால், அவர்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் அரசாங்கத்தின் மொழியியல் கொள்கையைத் திட்டமிட்டவாறு அமுல்படுத்துமாறு அமைச்சர் தனது செயலாளர் ஊடாக சகல அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளதாக அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கை மூலம் தமிழ், முஸ்லிம் மக்கள் நன்மையடைவார்கள் என அமைச்சு விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் அரச கரும மொழியாக தமிழ் மொழியும் சேர்த்துக் கொளளப்பட்ட போதிலும் அது முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (த)

## வர்த்தக வலயம் ஒன்றைப் புதிதாக நிர்மாணிப்பதற்கு 10 கோடி நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

கல்முனை நகரத்தை அடுத்துள்ள சவளக்கடைப் பிரதேசத்தில் புதிதாக வர்த்தக வலயம் ஒன்றை அமைப்பதற்குரிய துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை இவ்வர்த்தக வலய நிர்மாணத்திற்கென சுமார் 10 கோடி ரூபாவைச் செலவிட முன்வந்துள்ளது.

திகாமடுல்ல மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எம்.மயோன் முஸ்தபா, கைத்தொழில்அமைச்சர் ரோஹித போகொல்லாகமவிடம் விடுத்த வேண்டுகோளினை அடுத்தே இத்திட்டத்திற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

இதேவேளை, வர்த்தக வலயத்துடன் இனணந்ததாகப் பொருளாதார மத்தியஸ்தம் ஒன்றை நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், இதற்கான கிராமிய பொருளாதார அமைச்சர் பந்துல குணவர்த்தன தனது அமைச்சின் மூலமாக பல மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கவுள்ளதாகவும் மயோன் முஸ்தபா எம்.பி.தெரிவித்துள்ளார். (18)

## வாக்காளர் பதிவை உடன் மேற்கொள்ளவும்

2003 ஆம் ஆண்டுக்கான புதிய வாக்காளர்களைப் பதிவுசெய்வதற்குரிய விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்து அந்தந்தக் கிராம சேவையாளரிடம் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (18)

## பேருந்தின்றி பயணிகள் அவலம்

(வேலணை)

தீவுப்பகுதிக்கான இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துச சேவை சீரற்ற நிலையில் உள்ளது. நண்பகல் 12 மணிக்குப் பின்னர் பிரயாணிகள் பேருந்தின் வருகைக்காகப் பல மணித்தியாலங்கள் வரை காத்துநிற்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது. இக் குறைபாட்டை நீக்கிச் சிறந்த பேருநதுச் சேவையினை தீவுப்பகுதிக்கு நடத்துமாறு பல தடவை சம்பந்தபட்டவர்களைக கோரியும் இதுவரை எந்தவிதமான பலனும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (பி-47)

## சிங்களதேசம் மீண்டும்...

துணிவோடும் இருக்கிறது. இதனால், நாங்கள் சமாதானக் கரத்தை நீட்டியபடி இருக்கிறோம். இதனை நாங்கள் மூடப்போவதில்லை. சந்தர்ப்பத்தைத் தொடர்ந்தும் வழங்குவோம். சிங்கள தேசம் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு ஆத்மாத்தமான ஈடுபாட்டோடு சமாதான முயற்சிகள் நிலைத்துச செயற்படுமானால், இந்த இலங்கைத் தீவில் ஒரு சமாதான சூழ்நிலையை ஏற்படுத்தலாம். சமாதான முயற்சி என்ற பெயரில் சிங்கள தேசம் மீண்டும் ஏமாற்ற முற்பட்டால் அதன் விளைவை அவர்கள் நிச்சயமாக உணர்ந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். நாங்கள் யுத்தத்தை விரும்பவில்லை. ஆனால், பலத்தோடு இருககிறோம். அதனால்தான் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றோம்.

தமிழ் மக்களுக்கு ஓர் முடிவான தீர்வை வழங்கக்கூடிய அரசியல் பல்மோ அல்லது அரசியல் சூழ்நிலையோ தென்னிலங்கையில் ஏற்படவில்லை. அது எப்பொழுது ஏற்படும் என்பதை நாங்கள் எதிர்வு கூறவும் முடியாது. அது சிலவேளைகளில் கனவாகக்கூட இருக்கலாம், இருந்தாலும், எங்களுடைய மக்கள் இழந்த தமது வாழ்வுரிமைகளை நிலைநாட்டுவதற்கு இந்த இடைக்காலம் உதவுமாக இருந்தால் மட்டுமே சமாதானம் நீடிக்கும். சர்வதேச சமூகம் இதைப் புரிந்து கொண்டிருக்கிறது. இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதில் தலைவர் மிக உறுதியாக இருக்கிறார். அந்த இடைக்கால நிர்வாகம் இழந்துபோன தமிழ் மக்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்ப உதவிபுரியும் என நம்புகிறோம். இதனாலேயே தலைவர் இடைக்கால நிர்வாகத்தை வலியுறுத்துகிறார். இந்த இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாகவே இலங்கை அரசாங்கம் இடைக்காலத் திட்டவரைபுகளை எமக்கு அனுப்பியிருநதது. அவற்றில் முதலில் அனுப்பிய இரு வரைபுகளும் மிக மோசமானவை அது நடைமுறைச் சாத்தியமானதும் அல்ல. அதனால், அதனை நிராகரித்தோம்.

மூன்றாவது வரைபை அனுப்பினார்கள். அதுவும் பல குறைபாடுகளோடு இருக்கிறது. இருந்தாலும், அதனை நாம் உடனடியாக நிராகரிக்கவில்லை. மூன்றாவது வரைபையும் புலிகள் உடனடியாக நிராகரித்து விடுவார்கள் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். இதன்மூலம் விடுதலைப் புலிகள் சமாதான விரும்பிகள் அல்லர் என்று சர்வதேசத்திற்குப் பிரசாரம் செய்யலாம் எனக் கனவுகண்டார்கள். ஆனால், அது நடைபெறவில்லை.

எமது தலைமைப் பீடத்தில் ஆலோசனையுடன் எமது மக்களின் தேவைகளை உள்ளடக்கிய இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான ஆலோசனைகளை நாங்கள் கையளிக்கவிருக்கிறோம். இந்த ஆலோசனையின் வரைபுக்கு இறுதி வடிவம் கொடுப்பதற்கு சர்வதேச சட்ட வல்லுநர்களை ஒன்றிணைத்துக் கலந்துரையாடல்களை நடத்தவிருக்கிறோம். சிங்கள தேசம் இதனை ஏற்றுக் கொண்டு சமாதான வழிக்கு வருமாக இருந்தால், நாங்கள் பேச்சு வார்த்தைகளைத் தொடங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம். இதனை அரசு புறக்கணிக்குமாக இருந்தால். தமிழ் மக்கள் தங்களுடைய வழியில் சென்று தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்க அரசு வழிவிட வேண்டும் இதுதான் யதார்த்தம். எந்தவொரு அழுத்தங்களுக்கும் நாங்கள் அடிபணிந்து போகமாட்டோம்.

இவ்வாறு சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். (சு)

## உள்துறை...

ரத்து செய்யப்பட்டது.

நேற்றுப பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இம் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக் கணக்கான மக்கள் தம்முடைய சொந்த இடங்களில் தம்மை மீளக்' குடியமரச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், காணாமல் போன தமது பிள்ளைகளைக் கண்டு பிடித்துத் தருமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை யாழ்.செயலகத்தில் நடைபெறவிருந்த கலந்துரையாடலில் பங்குபற்ற வந்த யாழ்.மாவட்ட எம்.பி. ரவிராஜ் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை சமாதானப்படுத்தி அமைச்சரை செயலகத்திற்கு அழைத்து வர முயற்சித்த போதும் அதற்கு மக்கள் சம்மதம் தெரிவிக்கவில்லை.

இந் நிலையில் யாழ்.பல்கலைக் கழகத்தில் அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு நேர்ந்த சம்பவம் தனக்கும் நேர்ந்து விடக் கூடாது என்பதற்காக செயலகத்தில் இடம் பெறவிருந்த கலந்துரையாடல் ரத்து செய்யப்பட்டதாக அமைச்சர் ஜோன் அமரதுங்கா அறிவித்தார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்று வந்த சமாதானப் பேச்சுவார்த்தை ஸ்தம்பிதம் அடைந்தபின்னர் இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணம் வந்திருந்த அமைச்சர் ஒருவருக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறு இருக்க நேற்றைய சம்பவம் தொடர்பாக அமைச்சர் ஜோன் அமரதுங்கா கருத்துத் தெரிவிக்கையில் உயர் பாதுகாப்பு வலயத்தில் தம்மை மீளக்குடியமர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளைஎடுக்குமாறு மக்கள் தம்மிடம் கோரியதாகவும், அதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

(ம-4)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.08.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.